# வலம்புரி
VALAMPURI


விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 பங்குனி 23 திங்கட்கிழமை (05-04-2004) தொலைபேசி - 2223378 ஒலி 108



ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.


(படங்கள்:- ஐங்கரன்)



தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்றையதினம் யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் கூடியபோது எடுக்கப்பட்ட படம்

# 105 ஆசனங்களுடன் ஆட்சியமைப்பதில் ஐ.ம.சு.மு. தீவிரம்

## ஹக்கீம், தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோரிடம் ஆதரவு கேட்கிறது

(நமது நிருபர்)

நடந்து முடிந்த 13வது பாராளுமன்ற பொதுத்தேர்தல் இறுதி முடிவுகளின் பிரகாரம் எந்த கட்சியும் அறுதிப் பெரும் பான்மைப் பலத்தை பெறாத போதும் ஆகக் கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளதுடன் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் நலனில் அக்கறை கொள்ள கூட்டமைப்பு வேட்பாளர்கள் முடிவு

### இளம்பரிதியுடன் நேற்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் நேற்றுக் காலை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். நேற்றுக் காலை 9.00மணியளவில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கூட்டமைப்பு வேட்பாளர்களின் எதிர்கால நடவடிக்கைகள் தமிழ்மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக ஆற்ற வேண்டிய பங்களிப்புகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக மக்கள் நலன்களில் அக்கறை கொண்டு மக்களுக்காக பணியாற்றவும் தென்னிலங்கை அரசியல் காய் நகர்த்தல்களுக்கு அமைவாக முடிவுகளை எடுக்கவும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு அர்ப்பணிப்புடனும் உறுதிப்பாட்டுடனும் செயற்படவும் இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்து பெருவெற்றிபெற வைத்த வாக்காளர்களுக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையை நோக்கி இன்று பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி

(ஜெனிவா)

சுவிற்சர்லாந்தின் தலைநகர் ஜெனிவாவிலுள்ள ஐக்கியநாடுகள் சபை அலுவலகத்தை நோக்கி இன்று மாபெரும் பொங்குதமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் பொங்குதமிழ் பேரணியில் எழுச்சியுடன் கலந்துகொள்ளவுள்ளனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சியமைக்கும் முயற்சியில் ஐ. தே. கட்சி இறங்காது

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஐக்கிய தேசிய கட்சி இறங்காது என கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தல் பெறுபேறுகளின்படி ஐக்கிய மக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சியமைப்பு குறித்து நாம் இதுவரை பேசவில்லை

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(கொழும்பு)

ஆட்சியமைப்பது குறித்து தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எதனுடனும் நாம் இதுவரை பேச்சுக்கள் எதனையும் நடத்தவில்லை. இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சாதகமான

(10ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பு போராட்டத்திற்கு கிடைத்த பெரும் வெற்றி

(கிளிநொச்சி)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இரத்தம் சிந்தி, உயிர்விலை கொடுத்து, பெரும் தியாகங்கள் புரிந்து, பெரும இராணுவ வெற்றிகளைக் குவித்து தீர்க்கமாக வரலாற்றுக் கட்டத்தை அடைந்துள்ள எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் அதனைத் தலைமை தாங்கி முன்னெடுத்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நடைபெற்ற தேர்தலில் தமிழ்மக்கள் தமது தார்மீக ஆதரவை மீள உறுதிப்படுத்தி எமது போராட்ட முன்னெடுப்புக்களுக்கு தமது ஒட்டுமொத்த ஆணையை வழங்கி, ஆற்றிய வரலாற்றுப் பணி மகத்தானது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த்தேசிய உணர்வுடனும் மிகுந்த பொறுப்புணர்வுடனும் தமிழ் மக்கள் எந்தவிமதான சிரமங்களையும் பொருட்படுத்தாது, கொளுத்தும் வெயிலில் நீண்ட நேரம் வரிசையாக நின்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு ஒருமித்து ஒற்றுமை

(10ஆம் பக்கம் பார்க்க)

சிறுவிளம்பரம்

**O/L MATHS**

ஆரம்ப அறிவிலிருந்து கணித பாடத்தின் சகலஅலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புகளும் 39 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் **A,B** பெறுபேறடைவதற்கு நிறைவேற்றப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00-9.00. க.ஆறுமுகநாதன் **No.10**, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (8480)

# ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடு குறித்து தம்மாலோக தேரர் அறிவிப்பு

நடைபெற்று முடிந்த 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகளின்படி சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவினைத் தேடி இரு பெரும்பான்மைக் கட்சிகளும் ஓடித்திரியும் இவ்வேளையில், ஆட்சியைத் தீர்மானிக்கக் கூடிய ஒரு சக்தியாக விளங்கும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நிலைபாடு குறித்து அக்கட்சியின் செயலாளரான வணக்கத்துக்குரிய உடுவே தம்மாலோக தேரர் உத்தியோக பூர்வ அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

"இரண்டு பெரும்பான்மைக் கட்சிகளையும் நாங்கள் நம்பமாட்டோம், அவர்களின் செயற்பாடுகளில் எங்களுக்கு நம்பிக்கையில்லை! அதனால் தான் நாங்கள் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிலைமையே உருவாகியது. சிலர் எங்களுக்குப் பௌத்த சாசன அமைச்சையும், கலாசார அமைச்சையும் தருவதாக ஆசைகாட்டுகிறார்கள். ஆனால் நாங்கள் இதற்கு இணங்கமாட்டோம். அதேவேளை நாட்டின்நலன் கருதி ஆட்சியமைப்பவர்களுக்கு எமது உதவி தேவைப்படும் பட்சத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டு அவர்கள் செய்யும் பணிகளுக் கு ஆதரவு வழங்கும் அதேவேளை அவர்களது முறைகேடான செயற்பாடுகளுக்கு உடன்படமாட்டோம்.

மேலும் தமிழர் கூட்டமைப்புடன் இணைந்து யாராவது ஆட்சியமைப்பார்களேயானால் அதனை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம் என்றும் அறிக்கையொன்றின் மூலம் வண.தம்மாலோக தேரர் அறிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க ஜாதிக ஹெல உறுமயக் கட்சியை ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியில் இணைத்துக்கொண்டால், அது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் பாரிய பிளவுகளை ஏற்படுத்துமென்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச அறிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டகாலம் தொடக்கம் ஜே.வி.பிக்கும்,ஹெல உறுமயவுக்குமிடையில் கடுமையான முறுகல் நிலையிருந்து வருகிறது.

பௌத்த சிங்களத்துவத்திற்கு இவ்விருகட்சிகளுமே முன்னுரிமை வழங்கி வருகின்றன. இக்கட்சிகளின் இந் நிலைப்பாடே இவற்றுக்கு இந்தத் தேர்தலில்அதிக வெற்றி வாய்ப்பை பெற்றுக் கொடுபபிற்கும் காரணமாக அமைந்தது.

ஆனால் இவையிரண்டும் ஒரே அணியில் இடம்பெறுவதென்பது நடைமுறைச்சாத்தியமற்றது என்று அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மறுபுறத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு அம்பாறைத் தொகுதிகளில் வெற்றி பெற்றவர்களுடன் அம்மையாரின் முக்கியஸ்தர்களில் சிலர் தொடர்பு கொண்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது ஒருபுறமிருக்க ஆறுமுகம் தொண்டமான் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோருடன் ஜனாதிபதி தொடர்புகளை மேற்கொண்டிருக்கிறார். பேரியல் அஷ்ரப்பின் பிரசன்னத்தில் ரவூப் ஹக்கீமுக்குச் சில நெருடல்கள் இருக்கின்ற போதும் ஆறுமுகம் தொண்டமான் தனது பரிவாரங்களுடன் அம்மையாரை நாடிச் செல்வாராயின் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லையென்றும் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.(யே)

# புத்தளம் வன்முறைகளில் 4பொலிஸ் உட்பட 6 பேர்காயம்


(புத்தளம்)

புத்தளம் பாலாவி எருக்கலம்பிட்டி மீள்குடியேற்றக் கிராமத்தில் நேற்றுயதினம் காலை இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்தில் 4 பொலிஸார் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளதாகத்தெரியவருகிறது.

புத்தளம் மாவட்ட தேர்தல் தொகுதிகளின் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் ஆதரவாளர்கள் மீது நூர்தீன் மசூரின் ஆதரவாளர்கள் பலர் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதன்போது, 2வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததுள்ளன. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற புத்தளம பொலிஸாருக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில்4பொலிஸாரும்கட்சி ஆதரவாளர்கள் இருவரும் காயமடைந்துள்ளனர்.இவர்கள் தற்போது புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இவ் வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 15 பேர் பொலிஸாரால் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-15)








சர்வதேச லயன்ஸ் கழகம் 306-B மாவட்டம் வலயம் 8ன் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் நல்லூர் லயன்ஸ் கழகத்திற்கு விஜயம் செய்தபோது பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதையும், லியோ கழகங்களின் மாவட்டத் தலைவர் லயன் துரைராசா வேம்படி மகளிர் கல்லூரி ஊழியர் ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்குவதையும், பிராந்தியத் தலைவர் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய பொதியைத் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத் திட்டப்பணிப்பாளர் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாசிடம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## தேர்தல்முடிவுகளைஅடுத்து

# மட்டு.நகர் எம்.பிக்களுடன் கருணா மந்திராலோசனை

(மட்டக்களப்பு)

தேர்தல் முவுகளையடுத்து அம்பாறை, மட்டக்களப்பு தொகுதிகளில் வெற்றி பெற்ற தமிழ் கூட்டமைப்பு உறுப்பினர்களை இன்று காலை புலிகளின் முன்னாள் பிரமுகர் கருணாஅம்மான் சந்திக்கவிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே சந்திரிகா அம்மையாரின் முக்கியஸ்தர்கள் கருணா அம்மானைத் தொடர்பு கொண்டதையடுத்து இக் கூட்டம் நடைபெறவிருப்பதாகவும் மட்டக்களப்பின் தமிழர் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கம் தோல்வியடைநததைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத் தமிழர் கூட்டமைப்பின் நிலைப்பாடுபற்றி இன்னும் தெளிவான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. (யே)

# சங்கரி விடுத்த வேண்டுகோளை தேர்தல் ஆணையாளர் நிராகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றுள்ளதால் அம் மாவட்டத்தின் தேர்தலை இரத்துச் செய்யுமாறு யாழ். மாவட்ட சுயேச்சை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி விடுத்த வேண்டுகோளை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நிராகரித்துள்ளார்.

வாக்களிப்புக்களை இரத்துச் செய்தவாக்களிப்பு நிலையங்களில் மீள்வாக்குப் பதிவுகளை நடத்துவது தொடர்பாக அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேசசைக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோருக்கும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்நாயக்கவுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே தேர்தல் ஆணையாளர்களிடம் ஆனந்தசங்கரி விடுத்தவேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிறேம்ஜயந், ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் சேனத்கப்புக்கொட்டுவ,தேசிய ஹெல உறுமய கட்சிச் செயலாளர் திலக் கருணார்ட்ண உட்பட பலர் கலந்து கொண்ட இந்தச் சந்திப்பில், தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுகளின் தலைவர்கள் தேர்தல் வாக்களிப்பு தொடர்பாக தமது கருத்துக்களை தெரிவித்தார்கள்.

அந்த வகையில் யாழ்.மாவட்ட சுயேசசை வேட்பாளர் வீ.ஆனந்த சங்கரி யாழ்.மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதால மீண்டும் அங்கு வாக்களிப்பை நடதத வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். ஆனால் ஆனந்த சங்கரியின் இந்த வேண்டுகோளுக்கு பிரதான கட்சிகள் உடன்படாத காரணத்தால் தேர்தல் ஆணையாளர் அவ் வேண்டுகோளை நிராகரித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தல சட்டவிதிகளுக்கு அமைய அசம்பாவிதம் இடம்பெற்ற வாக்களிப்பு நிலையம் ஒன்றில் மீள் வாக்குப்பதிவு செய்யப்டுவதற்கு முன்னர் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், சுயேச்சைக்குழுக்களின் தலைவர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட வேண்டும்.

என்பதற்கு அமையவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி61,10)

# பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பொதுநலஅமைப்பு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் நியூஸிலாந்து அமைச்சினால் வழங்கப் படவுள்ள பட்டப்படிப்பிற்கான புலமைப்பரிசில்களுக்குத் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து மூன்றாம் நிலைக் கீல்வி, பயிற்சி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை மாணவர்களுக்கு உயர் கற்கை நெறிகளைத் தொடரவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் வாய்ப்புக்களை அளிக்கும் வகையில் 2 புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இப் புலமைப் பரிசிலானது, எதிர்வரும்2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நியூஸிலாந்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான வயது வரம்பு மட்டுப்படுத்தப்பட வில்லை. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் குறிப்பிட்ட ஓர் துறையில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பிற்கு மேல் சிறப்புப் பட்டமொன்றைப் பெற்றதும், அரசாங்கத் திணைக்களம் பல்கலைக்கழகம் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் பணிபுரிவதுமான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் மேல் மூலையில் பொதுநலஅமைப்புப் பட்டப்படிப்பிற்கான புலமைப் பரிசல்கள்-நியூஸிலாந்து 2005என்ற வாசகங்கள் தெளிவான எழுத்திலோ அன்றி தட்டச்சிலோ பொறிக்கப்பட்டு எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் மூன்றாம் நிலைக்கல்வி பயிற்சி அமைச்சு ,இல.18,வோட் இடம், கொழும்பு-7'எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(தி-18)

❑

(கொழும்பு)

மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி அமைச்சினால், ரஷ்யக் குடியரசின் மூலம் வழங்கப்படவுள்ள பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுள்ளன.

பொறியியல், விஞ்ஞானம், விவசாயம் மற்றும் மொழியாராச்சி போன்ற கற்கை நெறிகளுக்கே புலமைப் பரிசில்கள் ரஷ்யக குடியரசினால் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 30.04.2004ஆம் திகதியன்று 35வயதிற்குக் குறையாத,தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ரஷ்ய பட்டப்பின் படிப்பிற்கான புலமைப்பரிசில்கள் 2004/2005' எனத் தெளிவாக எழுதி எதிர்வரும்30ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர் மூன்றாம் நிலைக்கல்வி,பயிற்சி அமைச்சு,இல.18 வோட் இடம், கொழும்பு-07 எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது. (தி-18)

# தேர்தல் முடிவுகள் தரும் அரசியல் மாற்றங்கள்

**விதுரன்**

1 பாராளுமன்றப் பொதுத் தேர் தலில் 2004 முடிவுகள் ஸ்ரீலங்க சுதந் திரக்கட்சி ஜே.வி.பி இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெற்றி னணி வெற்றியை ஈட்டியிருப்பது கடந்த இரண்டு வருடகால இடை வெளிக்குள் சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ள மனமற்றத்தை வெளிப் படுத்தியுள்ளது.

சமாதனப் பேச்சுவார்த்தை சுமுகமான பயப்பீதியற்ற நிலைமைகள் ஏற்பட்ட போதிலும், மக்கள் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியகட்சிக்குப் பெரும்பான்மைப் பலத்தை வழங்காததன் காரணம் என்ன யுத்த நிறுத்தத்தைக் கடைப் பிடித்தல் என்ற இரண்டு விடயங்கள் மட்டும் தனது செல் வாக்கை உயர்த்தி விடும் என பிரதமர் ரணில் கருதியிருந் தார். இதனால் அவர் மக்களின் அடிப்படைப்பிரச்சினைகளான

முன்னணியின் வெற்றிக்கு அதிகரித்துவரும் ஜே.வி.பியின் செல்வாக்கும், கணிசமான பங்கைக் கொடுத்துள்ளது.

இருந்தும் , ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்கவின் உரையும் அவர் தலைமையிலான கட்சி கையாண்ட பிரசார யுக் தியும் வெற் றிக்குப் பெரும் பங்காற்றியது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தான்செய்ததை செய் ததாகக் கூற முடியாதுதத் தளிப்பதும், செய்யாததைச் செய்ததாகக் கூறி முடிக்கும் ஜனாதிபதியின் திறமையும் ரணிலின் தோல்விக்கும், சந்திரிகாவின் வெற்றிக்கும் பற்காற்றியிருந்தது. அத்தோடு, பொதுஜன

வாகையைக் கொடுத்துள்ளது.

மூலம் இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பேன் எனக்கூறி

என்பது இங்கு ஆராய்வுக் குரியது.


*அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை*

இருபது வருடகால யுத் தத்தை நிறுத்தி கடந்த இரண்டு வருட காலத்தில் சமாதான சூழ்நில்லையை ஏற்படுத்திய பிரதமர் ரணில் விக்கிரம சிங் காவின் மென்மையான, மெது வான போக்கும், தீர்மானம் எடுப்பதில் காட்டும் சோர்மானமும், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாததன் விளைவுமே அவரின் தோல்விக்குக் காரண மெனலாம்.

அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான சூழ் நிலையை ஏற்படுத்தி யிருந்த போதிலும், நாட்டிற்கு அவசர மாகத் தேவைப்பட்ட நிரந்தர சமாதானத்தீர்பை எட்டத் தவறிவிட்டார்.

வெறுமனே காலம் கடத் தும் செயற்பா டாக, பிரதமரின் நடவடிக்கைகள் நடந்தேறி யதே தவிர ஓர் உருப்படியான முடிவுகள் எதனையும் அவரது ஆட்சி பெற்றுத்தரவில்லை.

தொடர்ந்து யுத்தம் என்ற சொற்பதத்தைக் கேட்பதற்கு மக்கள் எவ்வளவு தூரம் விரும்பவில்லையோ,அதேபோல்






தனது அதி காரத்தை பயன் னடுத தி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடாத்திய ஜனர்திபதி சந்திரிக்கா குமரதுங்கவின் செயற்பாடு

பிரதமர் ரணில்விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்ன ணிக்கு

வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, நிவாரணக் கொடுப்

ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில், ஜனாதிபதி சந்



களை நியாயப்படுத்தும் வகையில் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதிக்குச் சாதகமாக அமைத்துள்ளது.

யாருமே எதிர்பாரத வகையில் கருத்துக் கணிப்புகளுக்கு அப்பால் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தலைமையிலான ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அதிகப் படியான வாக்குகளைப் பெற்றிருப்பது ஓர் அதிர்ச்சி தரும் உண்மையாகும் ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சியும். ஜே.வி. பியும் கூட்டுச்சேர்ந்த்த போது தென்னிலங்கையில் பல் வேறு விமர்சனங்கள் எழுத்தன.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந் துள்ளதால் ஸ்ரீலங்க சுதந் திரக் கட்சியின் ஆதரவாளர்கள் தமது ஆதரவை விலங்கிக் கொள்வார்கள். இதனால் ஐக் கியமக்கள் சுதந்திர முன் னணியின. வெற்றியென்பது சாத்தியப்படாமல் போகு மென்ற கருத்துக்கள் தென் னிலங்கை அரசியல் வட்டரங் களில் பரவலாய் பேசப்பட்டது.

ஆனால் இத்தகைய எதிர்வு கூறல்களுக்குமேலாக, ஐக்கியமக்கள் சுதந்திர முன்

கடந்த தேர்தலில் வாக்களித்த மக்கள் இரண்டு வருடகால இடைவெளிக்குள் மிகவேகமாக மனம் மாறி ஜனாதி பதி சந்திரிகா குமரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்துள்ளனர்.

கடந்த தேர்தலில், அளிக் கப்பட்ட வாக்குறுதிக்கமைய விடுதலைப்புலிகளுடன் புரிந்துணர்வு உடண்படிக் கையை செய்து கொண்டு யுத்தநிறுத் தத்தை ஏற்படுத்திய பிரதமர் ரணில்விக்ரமசிங்க,வி டுத்லைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தையையும் நடந்தியிருந்தார் இதனால் கடந்த இரண்டு வருட காலமாக யுத்தம் நிறுத்தப்பட்டு மனித உயிர்களின அழிவுகள் தவிர்க் கப்பட்டன நாட்டில் ஒரள வேனும் அமைதி திரும்பி சமதானச் சூழ்நிலை எற்பட்டது இதன் காரணமாக நாட்டின் பொரு ளாதர வளர்ச்சி அதிக ரித்ததோடு வெளிநாடுகளும் தாராளமாக நிதி உதவிகளை வழங்க முன்வந்தன

இவ்வாறாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கடந்த இரண்டு வருட ஆட்சியில் ஓர்

தொடர்ந்தும் சமாதானம் என்ற வாய்மொழிப் போதனையை மக்கள் கேட்கத் தயாரில்லை.



சமாதானம் என்பதை வெறும் வார்த்தை வடிவங் களில் கேட்டு அலுத்துப்போன மக்கள் ஓர் நிரந்தரமான சமா தானத்தீர்வையே ரணில் விக் கிரமசிங்கவிடம் எதிர்பார்த் திருந்தனர். ஆனால் அதனை வழங்குவதற்கு ரணில் தவறி விட்டார்.

அதேபோல சமாதான் பேச்சு வார்த்தையை முன்னெடுத்தல்,

பனவு என்பனவற்றில் எது வித அக்கறையும் காட்டாமல் இருந்ததோடு, பொருட்களின் விலைகளை கண்டபாட்டில் உயர்த்தி ஏழைமக்களின் நிவாரணத்தில் பலத்த தாக் கத்தை ஏற்படுத்தினார்.

சமாதானம் என்பது நாட் டின் ஒட்டுமொத்தமான தேவைப பாடு என்றாலும், வறிய மக்கள் அதிகமாக வாழும் இலங்கை யில் ஏழைகளின் வீடுகளில் அடுப்பு எரிகின்றதா? என்ப தைப்பார்க்காத எவருமே தேர் தலில் அதிக வாக்குகளைப் பெற்றதாக வரலாறில்லை.

சுருங்கக்கூறின் கடந்த இரண்டுவருடகால ஆட்சியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கு உலக நாடுகளின் பல மான ஆதரவு , விடுதலைப் புலி களின் ஒத்துழைப்பு என்பன் கிடைத்த போரிலும் அவர் அதனை நல்ல முறையில் பயன் படுத்திக்கொள்ளாததன் விளைவாகவே மக்கள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு ஓர் சந்தர்ப்பத்தை வழங்கத் தீர்மானித்தனர்.

*ஜனாதிபதியின் உரையும் பிரசார யுக்தியும்*

ஐக்கிய மக்கள் சுதந்திர

திரிகா குமாரதுங்காவினால் முன் வைக்கப்பட்ட உத்தேச அரசி



யல் யாப்பை பாராளுமன்றத்தில் வைத்து ஐக்கியதேசியக் கட்சி ளிப்பதையும், எதிர்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரம சிங்க அதனைப் பாாத்துச் சிரிப்பதையும் பிராதன பிரசாரக் கருவியாக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான கட்சி பயன் படுத்திக்கொண்டது. இதன் காரணமாகவும் மக்களின் வாக் களிப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பக்கம் திசை திரும்பியது. □

# யாழ். மாவட்டப் பாடசாலைகளின் சதுரங்க கரப்பந்துச் சுற்றுப்போட்டிகள்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்துச் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் நல்லூர் சட்டநாதர் கோவிலடி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது. இதேவேளை, யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கச் சுற்றுப்போட்டிகளும் யாழ். வலயக் கல்விப் பணிமனையில் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளிலும் (பெண்கள்) பின்னர் 10ஆம், 11ஆம் திகதிகளிலும் (ஆண்கள்) நடைபெற ஏற்பாடகியுள்ளன. கரப்பந்து மற்றும் சதுரங்கப் போட்டிகள் தினமும் காலை 8.30மணிக்கு ஆரம்பமாகும் என்று யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிபபாளர் த.அருணகிரிர்ராஜா அறிவிக்கிறார்.

07.04.2004 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் கரப்பந்துப் போட்டி விபரம்:
15 வயது - யா/கைதடி முத்துக் குமாரசாமி எதிர், யா/அருணோதயக் கல்லூரி.
15வயது - யா/சாவகச்சேரி இந்து எதிர், யா/புனித அந்தோனியார் கல்லூரி.
17வயது - யா/கொடிகாமம் திருநாவுக்கரசு எதிர், யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்.
19வயது - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் எதிர், யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
19வயது - யா/இடைக்காடு ம.வி. எதிர், யா/கரவெட்டி விக்னேஸ்வரா.
19வயது - யா/ புனித அந்தோனியார் எதிர், யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம்.
19வயது - யா/கரவெட்டி விக்னேஸ்வரா எதிர், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
15வயது - யா/கைதடி முத்துக்குமாரசாமி எதிர், யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம்.
17வயது - யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு எதிர், யா/இமையாணன் [illegible] பாடசாலை.
19வயது - யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி எதிர், யா/புனித அந்தோனியார் கல்லூரி.
17வயது - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் எதிர், யா/இமையாணன் அ.த.க.பாடசாலை
19வயது - யா/சாவகச்சேரி இந்து எதிர், யா/இடைக்காடு ம.வி.
15வயது - யா/அருணோதயக் கல்லூரி எதிர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம்.

08.04.2004 வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் கரப்பந்துப் போட்டி விபரங்கள்:
15வயது - யா/ஆவரங்கால் மகாஜனா எதிர், யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா.
15வயது - யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி எதிர், யா/சண்டிலிப்பாய் இந்து.
17வயது - யா/இளவாலை மெய்கண்டான் எதிர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம.
17வயது - யா/நயினாதீவு ஸ்ரீகணேசா எதிர், யா/புத்தூர் சோமஸ்கந்தா.
19வயது - யா/மகாஜனாக் கல்லூரி எதிர், யா/சோமஸ்கந்தாக் கல்லூரி.
17வயது - யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி எதிர், யா/சாவகச்சேரி இந்து.
19வயது - யா/மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோ எதிர், யா/நெடுந்தீவு ம.வி.
15வயது - யா/ஆவரங்கால் மகாஜனா எதிா யா/நெல்லியடி ம.ம.வி.
17வயது - யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் எதிர், யா/நெடுந்தீவு ம.வி.
17வயது - யா/இளவாலை மெய்கண்டான் எதிர், யா/நெடுந்தீவு ம.வி.
15வயது - யா/நயினாதீவு ஸ்ரீகணேசா எதிர் யா/நெல்லியடி ம.ம.வி.

போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டிய அணிகள் போட்டி நிரலைக் கவனமாகப் பரிசீலித்து ஆயத்த நிலையிலிருக்குமாறும் தேவையான உணவு, குடிதண்ணீர் கொண்டு வருமாறும் அறிவுறுத்தப்படுகிறது. (யே)

## விளையாட்டுச் செய்திகள்



தடி ஊன்றிப் பாய்தலில் உலக சம்பியன் பட்டத்தை வென்ற அவுஸ்திரேலிய வீராங்கனை எமா ஜோர்ச் தனது மெய்வல்லுநர் வாழ்விலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

# நியூசிலாந்து 'ஏ' அணி இலங்கையை வென்றது

இலங்கை 'ஏ' அணிக்கும் நியூசிலாந்து 'ஏ' அணிக்குமிடையிலான நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் நியூசிலாநது 'ஏ' அணியினர் 46 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளனர். இதன்படி மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில்1:0 என்ற ஆட்டக் கணக்கில் நியூசிலாந்து 'ஏ' அணி முன்நிலை வகிக்கின்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணியின் பணிபபின் பேரில முதல் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 'ஏ' அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் முடிவில் 9விக்கெற்றுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். நியூசிலாந்து'ஏ'அணியின் துடுப்பாட்டத்தில் மார்சல் கொவ் 53 ஓட்டங்களையும் கரீஸ் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர். பந்துவீச்சில் இலங்கையணி சார்பில் கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி 3விக்கெற்றுக்களையும், ஜெகன் முபாரக் மற்றும் பெனாண்டோ ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை 'ஏ' அணியினர் 45.4 ஓவர் முடிவிலேயே சகல விக்கெற்றுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே பெற்றதனால் 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து 'ஏ' அணியினரிடம் தோல்வியைத் தழுவியிருந்தனர். இலங்கை 'ஏ' அணியின் துடுப்பாட்டத்தில் இயன்டானியல் 32ஓட்டங்களையும், ஜெயவர்த்தன 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர். பந்துவீச்சில் நியூசிலாந்து 'ஏ' அணி சார்பில் மில்ஸ் 4விக்கெற்றுக்களையும், கரீஸ் மற்றும் மாட்டின் ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றி தமது அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றியிருந்தனர்.

(யே - 68)

# சிம்பாப்வே கிரிக்கெற் அணியின் பயிற்றுனர் இராஜினாமா

சிம்பாப்வே கிரிக்கெற் தலைவர் பதவியில் இருந்து கீத் ஸ்ரிக் இராஜினாமா செய்தமை அடுத்து அணியின் பயிற்றுவிப்பாளரான ஜொவ் மார்ஷ் பதவி விலகத் தீர்மானித்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை தனது தலைமைப் பதவியை கீத்ஸ்ரிக் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து 20 வயதுடைய இளம் வீரரான டெரன்டே டைபு சிம்பாப்வே கிரிக்கெற் அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இந்த நியமனத்தில் அதிருப்தி கொண்ட பயிற்றுனர் ஜொவ் மார்ஷ் தனது இராஜினாமாக் கடிதத்தினை சிப்பாப்வே கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையிடம் சமர்ப்பித்துள்ளார். மூத்த டெஸ்ட் வீரரான கீத் ஸ்ரிக் 59 டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளிலும் 183 ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாடியுள்ளார். மேலும் 21 டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ள அவர் 4 போட்டிகளில் வெற்றிகளையும், 6 போட்டிகளில் வெற்றி தோல்வியின்றியும் முடித்துள்ளார். கீத்ஸ்ரிக் தலைமையேற்று விளையாடிய 68 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 18 போட்டிகளில் சிம்பாப்வே அணிக்கு வெற்றிகளைத் தேடிக்கொடுத்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் டெரன்டே டைபு கடமையாற்றவிருக்கின்றார். இத்தெரிவு முறை குறித்து தனது ஆட்சேபத்தை தெரிவித்துள்ள பயிற்றுனர் ஜொவ் மார்ஷ், கீத்ஸ்ரிக்கின் இராஜினாமா தொடர்பாகவும் சிம்பாப்வே கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை தனது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (யே-68)

# வேலணை பிரதேச செயலர் பிரிவின் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

தீவுப்பகுதி தெற்கு வேலணைப் பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளின் அனைத்துப் போட்டி முடிவுகளில் நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழகம் 51 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது. கடந்தமாத இறுதியில் புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டி மெய்வல்லுநர் நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும், வேலணைப் பிரதேச செயலர் திரு.மு.நந்தகோபாலன் அவர்களின் தலைமையில் நடைபெற்றிருந்தது இந்நிகழ்வின் விரதம விருந்தினராக யாழ்.பல்கலைக கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான திரு.ந.பேரின்பநாதன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தா.

மேலும் சிறப்புவிருந்தினர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.இ.றோகான், இராஜசிங்கம் அவர்களும், புங்குடுதீவு மகாவித்தியாலய. அதிபர் திரு. க.தர்மகுணசிங்கம் அவர்களும் வட இலங்கை சர்வோதய புங்குடுதீவு பொறுப்பதிகாரி செல்வி. பொ.ஜமுனாதேவி அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வேலணை பிரதேச செயலர் பிரிவின் 2004ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டி நிகழ்வின் சிறந்த போட்டிக்கான வீரராக நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழகத்தைச் சோந்த செல்வன் க.ரதீஸ்கரன் தெரிவு செய்யபபட்டிருந்தார். இதன்படி குழுநிலை மற்றும் மெய்வல்லுநர் போட்டி முடிவுகளின்படி கழகங்கள் பெற்ற முடிவுகள் வருமாறு.

| கழகம் | வெற்றி பெற்ற போட்டிகள் மற்றும் நிகழ்ச்சிகள் | பெற்ற புள்ளிகள் | மொத்த புள்ளிகள் | நிலை |
|---|---|---|---|---|
| நயினாதீவு அண்ணா வி.க | கரப்பந்து (ஆண்) 1ம் இடம்<br>உதைபந்து(ஆண்) 1ம் இடம்<br>கிரிக்கெற் (ஆண்) 2ம் இடம்<br>வலைப்பந்து (பெண்) 2ம் இடம்<br>மெய்வன்மை (ஆண்) 1ம் இடம்<br>மெய்வன்மை (பெண்) 2ம் இடம் | 10<br>10<br>07<br>07<br>10<br>07 | 51 புள்ளிகள் | (1) |
| புங்குடுதீவு பாரதி வி.க | மெய்வன்மை (பெண்) 1ம் இடம்<br>உதைபந்து (ஆண்) 2ம் இடம் | 10<br>07 | 17 புள்ளிகள் | (2) |
| நயினாதீவு இஸ்லாமிய வி.க | எல்லே (ஆண்) 1ம் இடம்<br>கரப்பந்து (ஆண்) 2ம் இடம் | 10<br>07 | 17 புள்ளிகள் | (2) |
| புங்குடுதீவு சன்ஸ்ரார் வி.க | கிரிக்கெற் (ஆண்) 1ம் இடம் | 10 | 10 புள்ளிகள் | (4) |
| துறையூர் ஐயனார் வி.க | வலைப்பந்தாட்டம் (பெண்) 1ம் இடம் | 10 | 10 புள்ளிகள் | (4) |
| நயினாதீவு ஞானவைரவர் வி.க | எல்லே (ஆண்) 2ம் இடம் | 07 | 07 புள்ளிகள் | (6) |
| புங்குடுதீவு சென்சேவியர் வி.க | மெய்வன்மை (ஆண்) 2ம் இடம் | 07 | 07 புள்ளிகள் | (6) |

# இங்கிலாந்திற்கெதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் மேற்கிந்தியத் தீவு அணியினர் தோல்வி அடைந்தனர்

இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெற் போட்டித் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றிக்கொண்டுள்ளது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின் போதே இங்கிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியை 8 விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது. இதன் மூலம் நான்கு டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரையும் இங்கிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்த 3வது டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. தனது முதலாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சகல விக்கெற்றுக் களையும் இழந்து 226ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தனது இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிசகல விக்கெற்றுக் களையும் இழந்து 94 ஓட்டங்களை மட்டுமே பெற்றக்கொண்டது. இதன்படி 93 ஓட்டங்களை மட்டுமே வெற்றி இலக்காகக் கொண்டு தனது இரண்டாவது இன்னிங்சில் துடுப்பாட்டத்தைத் தொடர்ந்த இங்கிலாந்து அணியினர் 2விக்கெற்றை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதன் மூலம் 8விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் அமோக வெற்றியை இங்கிலாந்து அணி பெற்றிருக்கின்றது. (யே- 68)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2004

# முடிவுகள் தொகுதி ரீதியாக

## காலி மாவட்டம்

எம்பிலிப்பிட்டிய தொகுதி
ஐ.ம.சு.மு -34840
ஐ.தே.க -22243
ஹெல.உறுமய -2411

உடுகும்பர தொகுதி
ஐ.ம.சு.மு -18319
ஐ.தே.க -15285
ஹெல.உறுமய -307

வலப்பிட்டிய தொகுதி
ஐ.ம.சு.மு -18002
ஐ.தே.க -14117
ஹெல.உறுமய -1944

அம்பலாங்கொட தொகுதி
ஐ.ம.சு.மு -26435
ஐ.தே.க -17289
ஹெல.உறுமய -2544

அக்மீமன தொகுதி
ஐ.ம.சு.மு - 30897
ஐ.தே.க - 21249
ஹெல.உறுமய - 3095

## மாத்தறை மாவட்டம்

தெனியாய தொகுதி
ஐ.ம.சு.மு -33051
ஐ.தே.க - 23262
ஹெல.உறுமய -1197

மிஹிந்தலை தொகுதி
ஐ.ம.சு.மு - 21008
ஐ.தே.க - 14336
ஹெல.உறுமய - 602

## கண்டி மாவட்டம்

பாததும்பற தொகுதி
ஐ.தே.மு -26230
ஐ.ம.சு.மு -16071
ஹெல.உறுமய -2946

தெல்தெனிய தொகுதி
ஐ.தே.மு -13380
ஐ.ம.சு.மு -13321
ஹெல உறுமய -627

குண்டக சாலை தொகுதி
ஐ.தே.மு -24807
ஐ.ம.சு.மு -23918
ஹெல உறுமய -3896

ஹரிஸ் பத்துவ தொகுதி
ஐ.தே.மு -46572
ஐ.ம.சு.மு -37806
ஹெல உறுமய -7079

## இரத்தினபுரி மாவட்டம்

ரக்குவானை தொகுதி
ஐ.ம.சு.மு -29509
ஐ.தே.க - 28453
ஹெல.உறுமய -1644

மெல்மதுல்ல தொகுதி
ஐ.ம.சு.மு - 23403
ஐ.தே.க - 22745
ஹெல உறுமய -1979

கொலன்ன தொகுதி
ஐ.ம.சு.மு - 48051
ஐ.தே.மு -28117
ஹெல உறுமய -3249

## பொலநறுவை மாவட்டம்

மின்னேரியாதொகுதி
ஐ.ம.சு.மு -30342
ஐ.தே.க -17522
ஹெல உறுமய -850

பத்தேகம தொகுதி
ஐ.ம.சு.மு -35936
ஐ.தே.க -24572
ஹெல உறுமய -1368

இரத்கம தொகுதி
ஐ.ம.சு.மு -29413
ஐ.தே.க -19408
ஹெல உறுமய -2267

## அனுராதபுரம மாவட்டம்

மதவாச்சி
ஐ.ம.சு.மு -27978
ஐ.தே.க -17859
ஹெல.உறுமய -484

கலாவெல தொகுதி
ஐ.ம.சு.மு -42639
ஐ.தே.க -26744
ஹெல உறுமய -1314

## திருகோணமலை மாவட்டம்

சேருவல தொகுதி
ஐ.ம.சு.மு - 19607
ஐ.தே.க - 10346
தமிழரசுக்கட்சி - 6178
மு.கா. - 4647

மூதூர் தொகுதி
மு.கா. -45523
தமிழரசுக்கட்சி -17005
ஐ.ம.சு.மு -1854
ஐ.தே.க -609

## கேகாலை மாவட்டம்

ரம்புக்கனை தொகுதி
ஐ.ம.சு.மு -22157
ஐ.தே.க -16858
ஹெல உறுமய -2256

கெரனியஹல தொகுதி
ஐ.ம.சு.மு -20436
ஐ.தே.க -18881
ஹெல உறுமய -824

தெவிநுவர தொகுதி
ஐ.ம.சு.மு -24746
ஐ.தே.க -19950
ஹெல உறுமய -176

## கம்பஹா மாவட்டம்

அத்தனகல தொகுதி
ஐ.ம.சு.மு - 45529
ஐ.தே.க -24282
ஹெல உறுமய -8742

## கொழும்பு மாவட்டம்

தெஹிவளை தொகுதி
ஐ.தே.மு -19865
ஐ.ம.சு.மு -12577
ஹெல உறுமய -9247
பு.இ.மு -112

மத்திய தொகுதி
ஐ.தே.க -71599
ஐ.ம.சு.மு -17681
ஹெல உறுமய -8881

பொரளை தொகுதி
ஐ.தே.க -21543
ஐ.ம.சு.மு -12484
ஹெல உறுமய -6360

மேற்குத் தொகுதி
ஐ.தே.க -19084
ஐ.ம.சு.மு -3613
ஹெல உறுமய -2824

## குருநாகல் மாவட்டம்

பெல்கலவல தொகுதி
ஐ.ம.சு.மு -24473
ஐ.தே.க -20435
ஹெல உறுமய -3237

ஹங்கெரிய தொகுதி
ஐ.ம.சு.மு -26607
ஐ.தே.க -25167
ஹெல உறுமய -2740

குளியாப் பிட்டிய தொகுதி
ஐ.ம.சு.மு -29778
ஐ.தே.க -27127
ஹெல உறுமய -3413

கிரியல தொகுதி
ஐ.ம.சு.மு -26607
ஐ.தே.க -25167
ஹெல உறுமய -2740

பொல்காவல தொகுதி
ஐ.ம.சு.மு -24473
ஐ.தே.க -20435
ஹெல உறுமய -3237

கிங்கிரிஸ்கிரிய தொகுதி
ஐ.ம.சு.மு -27715
ஐ.தே.க -24120
ஹெல உறுமய -2504

## மொனராகல மாவட்டம்

வெல்லவாயத் தொகுதி
ஐ.ம.சு.மு -51137
ஐ.தே.க -29102
ஹெல உறுமய -1618

திபில தொகுதி
ஐ.ம.சு.மு -27147
ஐ.தே.க -17859
ஹெல உறுமய -293

## புத்தளம் மாவட்டம்

நாத்தாண்டியா தொகுதி
ஐ.ம.சு.மு -25170
ஐ.தே.க -20461
ஹெல உறுமய -2466

## நுவரெலிய மாவட்டம்

மஸ்கலிய தொகுதி
ஐ.தே.க -100350
ஐ.ம.சு.மு -25989
ஹெல உறுமய -2617

## இரத்தினபுரி மாவட்டம் (முழுமை)

ஐ.ம.சு.மு -261450-6 ஆசனங்கள்
ஐ.தே.க - 205490-4ஆசனங்கள்
ஹெல உறுமய -20801
புதிய இடதுசாரி முன்னணி 1336
பதிவு செய்யப்பட்ட வாக்குகள்-655547
செலுத்தப்பட்ட வாக்குகள்-520349
செல்லுபடியாகும் வாக்குகள்-492003
நிராகரிக்கப்பட்ட வாக்குகள்-28342

## மாத்தளை மாவட்டம் (முழுமை)

ஐ.ம.சு.மு -108259-3 ஆசனங்கள்
ஐ.தே.க - 100642-2ஆசனங்கள்
ஹெல உறுமய -8819
பதிவுசெய்யப்பட்ட வாக்குகள்-312556
செலுத்தப்பட்ட வாக்குகள்-239611
செல்லுபடியாகும் வாக்குகள்-220062
நிராகரிக்கப்பட்ட வாக்குகள்-19549

## கம்பஹா மாவட்டம் (முழுமை)

ஐ.ம.சு.மு -509963-9 ஆசனங்கள்
ஐ.தே.க - 367572-6 ஆசனங்கள்
ஹெல உறுமய -102516- 2 ஆசனங்கள்
பதியப்பட்ட வாக்குகள்-1327145
செலுத்தப்பட்ட வாக்குகள்-1030864
செல்லுபடியாகும் வாக்குகள்-990002
நிராகரிக்கப்பட்ட வாக்குகள்-40862

## களுத்துறை மாவட்டம் (முழுமை)

ஐ.ம.சு.மு -291208-6ஆசனங்கள்
ஐ.தே.க - 212721-3ஆசனங்கள்
ஹெல உறுமய -56615-1 ஆசனம்
பதியப்பட்ட வாக்குகள்-746138
செலுத்தப்பட்ட வாக்குகள்-593760
செல்லுபடியாகும் வாக்குகள்-563019

### தலைவர் தெரிவு

(பருத்தித்துறை)

யாழ் மாவட்டச் சுகாதாரத் தொண்டர் சங்கத் தலைவராக ஜெ.ரவிச்சந்திரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

செயலாளராகஅ.மந்ததாகிளியும் பொருளாளராக எம்.கமலராணியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(ச)

## நீதிமன்றத் தீர்ப்புக்குறித்து கட்சிக் கூட்டத்தில் ஆராய்வு

(புதுடில்லி)

அரசியல் விளம்பரங்களுக்கு தடை விதித்து உச்ச நீதிமன்றம் பிறப் பித்துள்ள உத்தரவு குறித்து இம்மதாம் 6ம் திகதி புதுடில்லியில் அரசியல் கட்சிகளுடன் நடத்தவுள்ள பொதுக் கூட்டத்தில் விவாதிக்கப் படும் என்று தலைமைத் தேர்தல் ஆணையாளர் ரி.எஸ். கிஸ்ண மூர்த்தி கூறியிருக்கிறார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் விமான நிலையத்தில் செய்தியா ளர்கள் இது பற்றி கேட்டபோது, நீதிமன்றத்தின் உத்தரவை முழு மையாக படித்த பின்னரே அது பற்றி கருதது தெரிவிக்க முடியும் என்று தேர்தல் ஆணையாளர் பதில அளித்தார்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை பா.ஜ.க.வும் வரவேற்றுள்ளது.

விளம்பரவாசகங்கள் சம்பந்த மாக வழிகாட்டல் நெறிமுறைகளை வகுக்கலாம் என்று பா.ஜ.க.வின் செய்தித் தொடா பாடல் முக்தார் அப்பாஸ் நலவி கூறினார்.

அரசியல் விளம்பரங்களை வெளியிட தடைவிதிக்கும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை காங கிரஸ் கட்சியும் வரவேற்றிருக்கிறது. அரசியல் வாதிகளைத் தனிப்பட்ட முறையில் அவதூறு செய்யும் வகையில் தொலைக் காட்சிகளோ, பத்திரிகைகளோ எதையும் வெளி யிடாதவகையில் ஊடகங்களுக்கு நடத்தை விதிகளை வகுக்க வேண டும் என்று தோதல் ஆணையத்தைக் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கபில்சிவல் கேட்டுக் கொண்டி ருக்கிறார்.

சுமுகமான தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்தாத ஆரோக்கியமான விவாதங்களே அரசியலில் தேவை. தனிப்பட்ட அவதூறுச் செய்தி களையோ விளம்பரங்களையோ வெளியிட வேணடாம் என்று அவா ஊடகங்களுக்கு வேண்டு கோள் விடுத்தார். (து)

## பனிமலை இராணுவ முகாமில் குடியரசுத்தலைவர்

உலகிலேயே மிக உயர்ந்த பனிமலைப் பிரதேசமான டியாக் கின் இராணுவ முகாமுக்கு குடியரசுத்தலைவரும் முப்படை களின் தலைவருமான அப்துல் கலாம் சென்றார்.

4800 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள முகாமுக்கு 4000 மீற்றர் உயரத்தில் உள்ள போர்ப் பயிற்சிப் பளளிக்கும் அவர் சென்று அங்குள்ள வீரர்களுடன் அளவளா வினார்.

நாட்டின் இயற்கை வளத் திற்கு அடிப்படையான பனிமலைப் பிரதேசத்தைப் பாதுகாக்கும் அந்த வீரர்களின் துணிவைப் பாராட்டி யதுடன், அவர்களுக்குத் தேவை யான வசதிகளும் சாதனங்களும் விரைவில் வழங்கப்படும் என்றும் குடியரசுத்தலைவர் கூறினார்.

(து)

**இந்தியச் செய்திகள்**

## சாலை ஓரப்பிரசாரத்தில் சோனியா

(சாந்திபூர்)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மகாரஷ்டிர மாநிலத்தில் இரணடாம் நாளாகத் தமது மக்கள் சந்திப்பைத் தொடர்ந்தார்.

நாகபூரில் இருந்து ஹெலிகொப் ரடர் மூலம் விதா்ப் பகுதியில் உள்ள சாந்திராபு,ர் வந்தபோது அவரை விமான நிலையத்தில் காங்கிரஸ் தலைவர்கள் வரவேற்றார்கள்.

அங்கிருந்து உடனடியாக வாகனம் மூலம் சாலைவழியில் மக்கள் சந்திப்பைத் தொடங்கினார்.

இருபுறமும் கூடியிருந்த மக்களிடம் கைகுலுக்கினார்.ஆங்காங்கே தனது வாகனத்தை நிறுத்தி மக்களிடம் அவர் களின் நலன் குறித்து கேட்டறிந்தார்.

வரதாநகரில் செய்தியாளாகளி டம் பேசிய சோனியா காந்தி தமது இந்தச்சந்திப்புக்கு மிக வரவேற்புள்ள தென்றும் மக்கள் காங்கிரஸின் அமைப் புக்கு ஆர்வத்தோடு பதிலளிக்கிறார் கள் என்றும் கூறினார்.

சூழ்நிலை தற்போது தங்களு க்குச் சதாகமகவுள்ளது என்றும் அவர்தெரிவித்தார் . (து)

## அரசியல் விளம்பரங்களுக்குத் தடை நீதி மன்றத் தீர்ப்புக்கு வரவேற்பு

ஒழுக்கம் மற்றும் கண்ணியத் திற்கு ஊறு விளைவிக்கும் வகை யிலும் மத உணர்வுகளை தூண் டும் விதத்திலும் எந்தவொரு அர சியல் விளம்பரத்தையும் ஒளிபரப் பக் கூடாது என்று கேபிள மட்டும் தொலைக் காட்சி நிறுவனங்களு க்கு உச்ச நீதி மன்றம் உத்தர விட் டுள்ளது.

இத்தகைய விளம்பரங்களை தேர்தல் ஆணையம் கண்காணிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சிகள் தேர்தல் விளம்பரங்களை வெளியிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ஆந் திரா மாநில உயர் நீதிமன் றம் நீக்கியதை ரத்து செய்யுமாறு மத் தய அரசு சார்பில் தாக்கல் செய் யப்பட்ட மனு மீதான வழக்கில் தலைமை நீதிபதி டி.என். கரே தலைமையிலான 3 நீதிபதிகள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

அதிர்ச்சி ஊட்டக்கூடிய கசப் புணர்வை ஏற்படுத்தக் கூடிய மக் களிடையே எதிர்ப் புணர்வைக் உருவாக்கக்கூடிய விள்ம்பரங் களை தொலைக் காட்சி அலைவரி சைகளிலோ கேபிள இணைப்புகள் மூலமாகவோ ஒளிபரப்பக் கூடாது என்றும் நீதிபதிகள் உத்தரவிட் டார்கள்

இத்தகைய விளம்பரங்களை தயாரிப்பதற்காகச் செல விடப்பட்ட தொகையை அந்த வேட்பாளர்களின் தேர்தல் செலவில் ஏன் சேர்க்கக் கூடாது என்பதற்கு விளக்கம் அளிக கும் படியும் தேர்தல் ஆணையத்தை நீதிமன்றம் கேட்டுள்ளது. (து)

# சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி



"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி என்றாற் போல் முரளியின் விடயத்தில் தற்போது மூக்கை நுழைத்திருக்கிறார் கிறிஸ் புரோட். உலக சாதனையை நோக்கி போட்டி போட்டுக் கொண்டு முரளி முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் முரளியின் பந்து வீச்சு முறையற்றது என புரோட் அறிவித்திருக்கிறார். இச்செயலானது இலங்கை கிரிக்கெற் ரசிகர்களின மனதை புண்படுத்தும் விடயமாக அமைவதோடு, ரசிகர்களை ஆத்திரமூட்டும் செயலாகவும் அமைந்துள்ளது.

ஏற்கனவே மூன்று தடவைகள் அவுஸ்திரேலிய நடுவர்களால் பந்தை வீசி எறிவதாகக் குற்றம் சாட்டப்பட்டு முரளிக்கு "நோ போல்" வழங்கப்பட்டது. இதில் ஒரு முறையாக அவுஸ்திரேலிய நடுவர் டெரவ் ஹெயார் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் மைதானத்திலும், றோஸ் எமர்ஸன் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் மைதானததிலும் முரளியின் பந்து வீச்சு தவறானது என்று சர்ச்சையைக் கிளப்பினர்.

ஆனாலும் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் முரளியின் பந்து வீச்சுக் குறித்து பரிசீலிக்கப்பட்டு அவரது பந்து வீச்சு முறையில் தவறில்லை என்பது நிருபிக்கப்பட்டது.

## முரளிதரன் முறையற்றவரா?

இலங்கைக் கிரிக்கெற் அணி 1999 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுபபயணம் மேற்கொண்டிருந்த வேளை அடிலெயட் மைதானத்தில போட்டி நடந்து கொண்டிருக்கும்போது, முரளிதரனின் பந்து வீச்சுப் பாணி முறையற்றது என நடுவர் றோஸ் எமர்ஸன மீண்டும் ஒரு முறை சர்ச்சையைக் கிளப்பினார், ஆனாலும், சர்ச்சை குறித்து சற்றுமே அலட்டிக் கொள்ளாத முரளிதரன் முன்பை விட சிறந்த பந்து வீச்சாளராகத் தன்னை



மெருகூட்டிக் கொண்டு சுழற்பந்து ராஜ்யததில் தன்னை நிகரில்லாத வீரராக நிலை நிறுத்திக்கொண்டார்.

## தூஸ்ரா பந்து வீச்சு

வெறும் ஓ..ப் ஸ்பின் பந்து வீச்சில் மாத்திரமே தீவிர கவனம் செலுத்தாத முரளி, எதிரணியை திணறடிக்கும் முக்கிய ஆயுதமாக ஓ..ப் ஸ்பின், டொப் ஸ்பின், ..போட்டர் போன்ற பந்து வீச்சு முறைகளைக் கையாள்வதில் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். அத்துடன, தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ள தனது புது பந்து வீச்சான "தூஸ்ரா" பந்து வீச்சிலும் முரளி சிறந்து விளங்கினார்.

2000 ஆம் ஆண்டு வெறும் 10 போட்டிகளில் மாத்திரமே பங்கேற்று 75 விக்கெற்றுககளை வழ்த்தி "சர்ச்சைகளால் தான் துவண்டு விடவில்லை மாறாக என்னை இன்னும் மெருகேற்றியுள்ளேன்" என்பதை கிரிக்கெற் உலகுக்கு எடுத்துக காட்டினார். அவுஸ்திரேலியாவில் தனக்கு ஏறபட்ட அவமானம் குறித்து சற்றும் மனம் தளராத முரளிதரன் அந்நேரம இது குறித்துக் கருத்துக் கூறியபோது,

எனது பந்து வீச்சைக் கண்டு சிலா பயப்படுகிறீர்கள். எனவே கிரிக்கெற் அரங்கிலிருந்து யாரோ என்னை வெளியில் தள்ள முயற்சிப்பதாக உணர்கிறேன். எனவே கிரிக்கெற் அரங்கை விட்டு நான் ஒதுங்குவதை விட என்னை இன்னும் மெரு கேற்றிக்கொண்டு எதிரணியினருக்கு சிம்ம சொபபனமாக விளங்க வேண்டும் எனக் கருதினேன். இது தவிர இலங்கைக் கிரிகெற் சபையும், முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவும் எனக்கு பெரும் ஒத்துழைப்பைத் தந்தனர். இவர்கள் என்னை விளையாடுமாறு பணிக்கும் போது நான் ஏன் ஒதுங்கவேண்டும் என நினைத்தேன் என்றார்.

இந்த மன உறுதி முரளியை இன்னும் சிறந்த வீரராக வெளிக்காட்ட பந்து வீச்சில் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு உயர்த்தியுள்ளது.

## முரளியின் சாதனை

இதன்படி உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணிக்கெதிராக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கஸ் போவிச்சின் விக்கெற்றை வீழ்ததி தனது 500 வது விக்கெற்றை வீழ்த்திய முரளி, மிகக் குறைந்த போட்டிகளில் (87) விக்கெற்றுக்களை வீழ்த்தியவர் என்ற சாதனையை தன தாக்கிக் கொண்டார்.

உலகின் அதிகூடுதலான டெஸ்ட் விக்கெற்றுக்களை வீழ்த்தும் முயற்சியில் முனைப்பாகவுள்ள முரளி, ஷேன் வோர்ன ஆகிய இருவரில் ஷேன்வோர்ன் இச்சாதனையை நிலை நாட்டவும், முரளிதரன் ஷேன் வோர்னை வடக் கூடுதலான விக்கெற்றுக்களைத் தடுக்கவும் சதி முயற்சிகள் இடம் பெறுவதாகவும் அதில் ஒரு முயறசியே முரளியின் பந்து வீச்சு சர்ச்சைக்குரியது என மீண்டும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இவ்வளவு காலமும் ஏற்பட்ட பிரச்சினைகளை வெற்றிகரமாக முறியடித்து வந்த முரளிதரன், உலக சாதனையை முறியடிக்கும் நேரத்தில் பெரும சர்ச்சை ஒன்று உருவாகியிருக்கிறது இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாகவும், உலகத்துக்கு முரளியின் பந்து வீச்சு சரியானது என நிரூபிக்கவும் முரளியை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டு பரிசோதனைகள் நடைபெற்றுவருகின்றன.

## சோதனைக்கு ஆளான முரளிதரன்

இதேவேளை, இலங்கைக் கிரிக்கெற் சபையானது முரளிதரனை மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியுள்ளது என்பது குறிபபிடத தக்கது. அங்கு முரளிதரன், பேராசிரியா புரூஸ் எலியட் மற்றும் டரில்.. பொஸடா ஆகிய இரு நிபுணர்களாலும் பரிசோதிக்கப்பட்டு வருகின்றார். 1996 ஆம் ஆண்டு காலத்தில முரளியின் பந்து வசசு சரி யென உறுதிப்படுத்திய பேராசிரியர் புரூஸ எலியட் சர்வதேச கிரிக்கெற்சபையின் மனித நடமாடடக் குழு உறுபபினருமாவார்.



முரளி: "விழியைப் பிதுக்கி விரலைச் சுருட்டி விக்கெட் வீழ்த்தும் விறல்!"

## நோயபல்

மேற்கொண்டு வரும் பரிசோதனைகளின் முடிவுகள் இன்னும் ஓரிரு தினங்களில் தெரியவரும். இந்தப் பரிசோதனைகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, இலங்கையணியில் மீண்டும் களமிறங்க வேண்டும் எனபதே ரசிகர்களின் ஆர்வமாகும். சாதனைகளை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும் முரளிதரன் தனது வெற்றிப்பயணத்தை வெற்றிகரமாகத் தொடர வேணடும் என்பது ரசிகர்களின் ஆர்வமாகும்.

கொட்னி வோல்ஷின் உலக சாதனையை முறியடிக்க முரளிதரனுக்கு இன்னும் 7 விக்கெற்றுக்கள தேவைப்படுகின்றன. ஆனால் ஷேன் வோர்னுக்கோ 3 விக்கெற்றுக்கள் தேவைப்படுகின்றன. இருந்தாலும் யார் முதலில் உலக சாதனையை முறியடிபபார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# புகைத்தலுக்குத் தடை!

(அயர்லாந்து)

கடந்தவாரம் தொடக்கம் பொது இடங்களில் புகை பிடிப்பதை அயர்லாந்து அரசாங்கம் சட்டரீதியாக தடைசெய்துள்ளது.

இதனையடுத்து புகை பிடித்தலுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேக இடங்களில் புகை பிடிப்பவர்கள் ஒன்று கூடித் தமது வாடிக்கையான தொழிலை நடத்திவருகின்றனர்.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட புகை பிடிக்கும் விடுதியொன்றில் அயர்லாந்துப் பொதுமக்கள் சிலர் ஒன்றாக அமர்ந்து புகை பிடிப்பதையே இங்கு படத்தில் காண்கிறீர்கள். (யே)



# உஸ்பெக்கிஸ்தான் தாக்குதல்களையடுத்து தலைநகர் தஸ்கென்ரில் பொலிஸார் சோதனை

(தஸ்கென்)

உஸ்பெக்கிஸ்தானில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையடுத்து தலைநகர் தஸ்கென்ரில் பொலிஸார் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் எட்டுக்கும் மேற்பட்ட குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இக் குண்டுத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் பெரும்பாலும் பெண்களாகவே இருக்கினறனர். இவர்கள் அனைவரும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென்று கருதப்படுகின்றது.

அரசாங்கம் இப் பயங்கரவாத நடவடிக்கைகள் வெகு விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று அறிவித் துள்ளது.

பொலிஸார் நகரமெங்கும் தடைகளை ஏற்படுத்தி சோதனைகளை மேற்கொள்வதோடு பாதுகாப்பையும் பலப்படுத்தியுள்ளனர். (யே)



# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

94

## ஆறாவது அத்தியாயம்

## முக்குவர் சட்டம் பற்றிப் பொதுவாக நிலவும் சில கருத்துகள்

40. 1.தாய்வழி முதுசொமான நிலங்களைப் பொறுத்தவரையில் மட்டுமே முக்குவர் சட்டம் பின்பற்றப்படுகின்றது எனச்சிலர் கொள்வர்.தாய்வழி முதுசொமான நிலங்கள் தவிர்ந்த சொத்துகளைப் பொறுத்து எல்லா விதத்திலும் உரோமன் டச்சுச் சட்டமே பின்பற்றப்படுகின்றது என்பதும் சிலர் கருத்தாகும்.

இதற்கு மேல்வருவன உதாரணங்களாகக் கொள்ளப்படுகின்றன:

கணவன்,மனைவி ஆகியோரின் சொத்துகள் இரு சமபாகங்களாகப் பிரிக்கப்படுதல்:

முற்சந்ததியார்,ஒரே தலைமுறையினர்,பிற்சந்ததியார் ஆகிய பலதிறத்து உறவினர் சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கு அமைய உரிமையாளராக ஒப்புக்கொள்ளப்படலும் விலக்கப்படலும்;

முழு இரத்த உரித்து உடையவராயும் அரை இரத்த உரித்து உடையவராயும் உள்ள ஒரே தலைமுறையினரின் உரிமைகள் ஒப்புக்கொள்ளப்படுதல்;

கலியாணமின்றிப் பிறக்கும் பிள்ளைகளின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுதல்

2. மேலும்,தாய்வழி முதுசொமான நிலங்கள் மாமான்மார் மூலமாக மருமக்களுக்கு உரிமையாகுமென்றும், அவை மருமக்கள் காணி எனப்படும் என்றும்,அம் மருமக்கள் தங்கள் தாய்மாரை ஆதரிக்கவேண்டும் என்றும் அவர்கள் கருதுவர்.

3.வேறுசிலர்,தாய்வழி முதுசொமான நிலங்கள் தாய்வழியாகப் பெண்பிள்ளைகளுக்கும் கிடைக்குமென்று கொள்வர்.

4.தங்களுக்கு உரித்தான நிலங்களைப் பெண்களாற் பண்படுத்தவோ உடைமை கொள்ளவோ முடியாது என்பதால்,அந்நிலங்கள் ஆண்சகோதரர்களதும் அவர்களின் ஆண்மக்களதும் பராமரிப்பிற் கிரமப்படியே விடப்படுகின்றன.

5.எனவே, ஆண் சகோதரர்கள் சகோதரிகளின் சார்பிலுள்ள பராமரிப்பாளர் என்றும் மத்தியட்சக்காரர் என்றும் சொல்லப்படுவர்.

6.மாமன்மார் இறந்து போன காலத்திலே,தாய்வழி முதுசொமான நிலங்களை ஆண்மக்கள் பராமரிக்குமிடத்து, அவர்களைத் தாயின் சார்பிலுள்ள பராமரிப்புக்காரராகக் கொள்வதில்லை அவர்கள் சகோதரிகளின் சார்பிலான முகாமைக்காரராகக் கொள்ளப்படுவர்.

7.மருமக்களில் மூத்தவனே முகாமைகாரனாகவோ மத்தியஸ்தனாகவோ பொறுப்பு ஏற்றுக்கொள்வான். செய்கை பண்ணுமிடத்தும் புரோசனத்தில் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் பங்கு கொடுப்பது அவன் மனப்பிரியத்தின் பேரிலாகும்;ஆனால் தனது தாயாரை ஆதரிப்பதற்கு அவன் கடமைப்பட்டிருப்பான்.

8.இக்கருத்துகளை மேலும் விளக்கத்தேவையில்லை.அவை,இங்கு முன்னாலே சொல்லப்பட்ட முறையான விதிகளுக்கு எவ்வாறு அமைவாகவும் மாறுபாடாகவும் உள்ளன என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமும் இல்லை.

9.ஆனால், இக்கருத்துக்கள் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் மத்தியட்சர்,முகாமைக்காரர், தலைமை முகாமைக்காரர்,மருமக்கள் காணி என்னும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாசகர் அவதானிக்கத் தவறமாட்டார்கள்.

10.காணி என்பதைத் தவிர்ந்த அசைவுள்ள,அசைவற்ற பொருள்களைக் குறிக்கும் வேறு சொற்களோடு மருமக்கள் என்னும் மொழி இணைக்கப்படுவதில்லை. தாய்வழி முதுசொமான அசைவுள்ள சொம்கள் ஒருபோதும் மருமக்களுக்கு உரித்தாவதில்லை என்பதே இதற்கான காரணம் போலத் தோன்றும்.அத்துடன் பழங்காலத்தில் முக்குவரின் தோட்டம் துரவுகள், வ"டுவளவுகளிலிருந்து வேறுபட்டிருக்கவில்லை.அவை.பெண் மருமக்கள் இருக்குமிடத்து, அசைவுள்ள பொருட்களைப் போல,ஒருபோதும் ஆண் மருமக்களுக்கு உரிமையாவதில்லை.

## ஏழாம் அத்தியாயம்

## முக்குவர் சட்டத்தின் உற்பத்தி

முக்குவர் சட்டத்தைக் குறித்து“கருணை”யுள்ள நண்பர் ஒருவர் அதனை அச்சு யந்திரசாலையிலிருந்து வெளியாகிய தாள்கள் என்று வர்ணித்துள்ளமையால் அதன் தொகுப்பாளர் என்ற வகையில் முக்குவர் சமுதாயத்தின் தோற்றம் பற்றிய இந்த அவசரமான,சுருக்கமான குறிப்புகளை இங்கு சேர்த்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.அவை முக்குவரிடையே காணப்படும் மொழிவழக்கு ,வழமைகள்,மரவுவழிக் கதைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன.இத்தகைய நூலொன்றிலே அவற்றை விரிகாக விபரிக்க இயலாது.

1.முன்னொரு காலத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சேர்க்கை உறவுகள் கட்டுப்பாடுகளற்றனவாய் இருந்தன.

2.காலப்போக்கில மேல்வரும் விதிகள் அனுசரிக்கப்பட்டன.

அ)ஒரே குடியைச் சேர்ந்தவர்கள் சம்பந்தஞ் செய்வதை விலக்கிக்கொண்டனர்.

ஆ)மூத்த தலைமுறையைச் சேர்ந்த ஒருவரும் அவரைப் புணர்ந்து கொள்வோரும் அவரின் அடுத்த தலைமுறையிலுள்ள ஒருவரோடும் அவரைப் புணர்ந்து கொள்வோருடனும் பாலியற் சேர்க்கையை விலக்கிக்கொண்டனர்.

இ) உறவு முறையிற் சகோதரரானோரும் தம்மிடையிற் புணர்ச்சியைத் தவிர்த்துக் கொண்டனர். ஆனாலும் உறவுமுறையாற் சகோதரராகிய இருவரோ பலரோ அம்முறையில் இல்லாத ஒருவருடனோ பலருடனோ கூடிப்புணர்ந்து கொள்வது வழக்கமாகியது.

ஈ)உறவு முறையாற் சகோதரராய் உள்ளவர்களின் பிந்திய தலைமுறையாரோடும் புணர்ச்சி கொள்ளுதல் தவிர்க்கப்பட்டது.

உ)கலியாண சம்பந்தங்கள் இல்லாத ஒரு சமுதாயத்திலே,தனதும் தனதுபிள்ளைகள்தும் சீவியத்தின் பொருட்டு தன்னோடு வந்து கூடியிருந்து செல்கின்ற ஆண்கள்,கூடியிருக்கும்காலத்திலே தேடிவரும் சம்பாத்தியங்களைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு வற்புறுத்துவது ஒரு பெண்ணுக்கு இயல்பாகவே உள்ள சாதுரியமாகும்.

4.பெண் ஒருத்தி காலஞ்சென்று போனவிடத்து,அவள் விட்டுச்சென்ற பொருள்களெல்லாம் அவளுடைய பிள்ளைகளுக்குச்சேரும்.அவற்றை இயல்பாகவே ஆண்மக்களும் பெண்மக்களும் பகுந்து கொண்டனர்.

5பெண்பிள்ளைகளானோர், தங்கள் தாயைப்போலவே, தம்மோடு வந்து கூடிப்போகும் ஆண்களின் சம்பாத்தியங்களைப் பெற்றுக் கொள்வர்.அவர்களின் தேட்டமும் முதுசொமும் ஆண்களாயும் பெண்களாயும் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்குஞ் சேரும்.

6.மகன் ஒருவனைப் பொறுத்தவரையில் அவனுடைய வாழ்க்கைமுறை வேறுபட்டதாய் இருக்கும்.ஆண்கள் தங்கள் குடியை விட்டு வெளியே போதல் வேண்டும்.ஒருகுடியில் சம்பந்தக் கலப்பு விலக்கப்பட்டதால் ஆண்ஒருவன் பெண்ணைத் தேடுமிடத்து,தனது சொந்த ஊரினின்றும் வெளியே செல்லநேரிடும்.அதனால் அவன் தனது அசைவற்ற சொம்களைச் சகோதரிகளிடம் ஒப்படைத்துவிட்டுப் போவது வழமை.பழங்காலத்திலே நிலங்களை விற்பனை செய்யும் வழக்கமில்லை.

(தொடரும்)

# இவ்வருடம் தேர்தல் வன்முறைகள் குறைவு

## கண்காணிப்பாளர்கள் கருத்து

(கொழும்பு)

நேற்றுக்காலை 6.00 மணியுடன முடிவடைந்த 24மணிநேரத்தில் நாடளாவிய ரீதியில் 24தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற றுள்ளதாகத் தேர்தல் வன்முறைத் தடுப்பு பொலிஸ் பிரிவு தெரிவித்துள் ளது.

இவற்றில் 22சம்பவங்கள் குற்ற வியல் சட்டத்தை மீறியனவென் றும் ஏனைய 2ம் தேர்தல் சட்ட விதிகளை மீறியனவென்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பொதுத் தேர்தலுக் கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து நேற் றுக் காலைவரை ஆயிரத்து470 வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ள அதேநேரம்,ஆயிரத்து 160சம்பவங்கள் குற்றவியல் சட் டத்தை மீறியுள்ளதாகவும் ஏனைய 310 சம்பவங்களும் தேர்தல் சட்ட விதிகளை மீறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,கடந்த தேர்தல் காலங்களில் இடம்பெற்ற வன் முறைச சம்பவங்களுடன் ஒப்பிடு கையில்,இம்முறை தேர்தல் வன் முறைகள்வலுவாகக் குறைவடைந துள்ளதாகத் தேர்தல் ஆணையா ளர் தயானந்த திஸநாயக்க பொலிஸ உயரதிகாரிகள் உட்பட சர்வதேச தேர்தல் கண்காணிப் பாளர்களும் கருத்துத் தெரிவித துள்ளமை குறிப் பிடத்தக்கது.

(தி-18,61)

# தேர்தல் முடிவுகள் குறித்து 'கட்சித் தலைவர்களின் கருத்துகள்

(கொழும்பு)

தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை ஏற்றுக் கொள்வதும், புலிகளே ஏகப்பிரதி நிதிகளாக பேச்சுவார்த்தையில் அமரச் செய்வதற்கும் தமிழ் மக் கள் வழங்கிய அங்கீகாரமே தமது கட்சயின் வெற்றி என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித் துள்ளார்.

மலையகத்தில் அரசியல் ரீதியா கவும, கொள்கை ரீதியாகவும் நவீன அரசியல் சிந்தனை கொண்டவர் களே தமக்கு வெற்றியைத் தேடித் தந்திருப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்.

தேர்தலின் இறுதி முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர் மானிக்கப்படும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னணியில் திகழ்வதாகவும் கூட்டமைப்பின், பொதுச் செயலா ளர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித் திருக்கின்றார்.

இறுதி முடிவுகள் அறிவிக்கப் பட்ட பின்னரே முக்கிய சில தீர் மானங்களை எடுக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச செயலாளர் செனரத் சப்புக் கொட் டுவ தெரிவித்திருக் கின்றார்.

13 ஆவது பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் இதுவரை வெளி யிடப்பட்டுள்ள முடிவுகள் தொடர் பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இதனைக் கூறியிருக் கின்றனர். இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள, ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் அதி.வண. உடுவே தம்மலோஹ தேரர் பல்வேறு தடைகளையும் தாண்டி இந்தப் பயணத்தை மேற் கொண்டுள்ளதாக தெரிவித்திருக் கின்றார். மிகவும் குறுகிய காலத் துக்குள் இலங்கைத் தேர்தல் வர லாற்றில் தேரர்கள் இவ்வாறான வெற்றி ஒன்றைப் பெற்றது முதற் தடவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(தி-18)

# பிரதேச சபைத் தலைவர் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

தென்பகுதி பிரதேச சபையின தலைவர் ஒருவர் உட்பட அவரது சகாக்கள் 6 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்

இவர்கள் உடப்புசலலாவைப் பகுதியல் தாக்குதல் ஒன்றுக்குச சென்று கொண்டிருந்த வேளை பொலீஸார் இவர்களை ஆயுதங் களுடன் கைது செய்தனர்.

உடப்புசல்லாவைப் பகுதியில் உள்ள அரசியல்வாதியொருவரை தாக்குவதற்காக சென்று கொண்டிருந்த வேளை கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸார் இவர் களை கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து கைத்துப் பாக்கிகள் அவற்றுக்குரிய ரவை கள், கூரிய ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

பொலிஸார் இவர்களை நுவரே லியா நீதிமன்றில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (தி-63)

# வன்முறைகளில் ஈடுபட்ட 65 பேருக்கு விளக்கமறியல்

(மாத்தளை)

மாத்தளை மாவட்டத்தின் பல் வேறு இடங்களிலும் தேர்தல் சட் டவிதிகளை மீறும் குற்றச் செயல் களில் ஈடுபட்ட 65பேரை மாத்ளைப பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அரசியல் கட்சியொன்றின் ஆதரவா ளர்களான இவர்கள் அன்னவரும் கடந்த இரண்டாம் திகதி நடை பெற்ற பொதுத்தேர்தல் தினத் தன்று வன்செயல்களளில் ஈடுபட் டதுடன், கள்ளவாக்கு மோசடி ளிலும் பங்கேற்றனர் எனத்தெரி விக்கப்படுகின்றது.

இவர்கள் மாத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைககப்பட்டுள்ளனர்.

மாத்தளையில் நேற்று முன் தினம் அதிகாலை இடம் பெற்ற கைக்குண்டு வீச்சில் ஒருவர் உயி ரிழந்துள்ளார். மேலும் ஒருவர் ஆப த்தான நிலையில் எம்பிலிப்பிட் டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (தி-63)

## திருமுறைப் பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் ஆலயங்கள் தோறும் சென்று அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் ப்ன்னிரு திருமுறைப் பாராயணம் செய்துவருவது வழக் கம்.

அந்தவகையில் இன்றுதிங்கட கிழமை காலை 5.00மணிக்கு கைதடி உக்களை விநாயகர் தேவ ஸ்தானத்தில் மன்றத் தலை வர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலை மையில் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## இன்று ஒரு தகவல்

# சோதனை ஏன்?

"ஆண்டவன் அடிக்கடி என்னையேசோதிக்கிறான் சார்! இது பலரது கவலை. இப்படிக் கவலைப்படுபவர்களுக்கு ஆறுதலாக ஒருகதை கிடைத்தது. அதை உங்கள் காதிலும் போட்டு வைக்கலாம் என்று ஒரு ஆசை.

ஒரு காலத்தில் ஒருபெரியவர் இருந்தாராம். ஆண்டவன் அவருக்கு அடிக்கடி தரிசனம் கொடுப்பது வழக்கமாம். சும்ம வந்து தரிசனம் கொடுப்பது மட்டுமல்ல சிறிது நேரம் அவருடன் அமர்ந்து பேசிவிட்டுப் போவது வழக்கமாம்.

ஒரு நாள் இவரைத் தேடிக்கொண்டு ஒரு ஏழைப்பக்தர் வந்து சேர்ந்தாராம். வாழ்வில் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிடுப்பவர் இவர். அந்தப் பெரியவரைப் பார்த்துக் கேட்டார் ."ஏன் ஐயா ! நீங்கள்தான் அடிக்கடி ஆண்டவனிடம் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! எனக்காக ஒரு விஷயம் அவரிடம் கேட்டுச் சொல்லாக் கூடாதா? என்றார் "என்ன கேட்கவேண்டும்? சொல்லுங்கள் கேட்டுச் சொல்கிறேன்" என்றார். அவர் ஏன் எனக்கென்று கஷ்டம் மேல் கஷ்டமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்? என்று கேட்டுச் சொல்லுங்கள்

இவ்வளவுக்கும் நான் தினமும் அவரைத்தான் கும்பிடுகிறேன் பூசை செய்கிறேன். இருக்கிற கஷ்டம் போதாதென்று நேற்று எனது சிறு குடிசையும் இடிந்து விழுந்து விட்டது. இப்போது தகங்கக் கூட இடமில்லை என்றார். "சரி கடவுள் வரட்டும் கேட்டுச் சொல்கிறேன்" என்றார் பெரியவர்.

கொஞ்ச நாள் கழித்து ஒருநாள் பகவான் வந்தார். இவரைப்பார்க்க உடனே இவர் அந்த ஏழைப் பக்தர் கூறிய விஷயத்தைப் பற்றி ஆண்டவனிடம் கேட்டார். "இதற்கு நான் பதில் கூறுகிறேன். அதற்குமுன் நீய் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்றார் கடவுள். "என்ன செய்ய வேண்டும் ''என்று கேட்டார் பெரியவர் ."ஒரு செங்கல் வேண்டும்''என்றார்.ஏ

உடனே அந்தப் பெரியவர் புறப்பட்டு பக்கத்து நகரிற்குச் சென்றார்.அங்கே பார்த்தால் ஏல்லாம் பெரிய கட்டடமாக இருக்கிறது. அதிலிருந்து செங்கல்லை எடுக்க இவருக்கு மனமில்லை. இவர் இப்படிப் பார்த்துக் கொண்டே நடந்து சென்றார். அங்கே பாதியிடிந்து போன ஒரு வீடு மீதியும் எப்போது இடிந்து விழலாம் என்று பார்த்துக் கொண்டிருந்தது. இவர் போய் அதிலிருந்து ஒரு செங்கல்லை பிடித் து இழுத்தார் . இவர் இழுத்த வேகத்தில் மீதிக்கட்டடமும் விழ்ந்து விட்டது.

இவர் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை அந்த ஒரு செங்கல்லை எடுத்துக் கொண்டு வந்து பகவானிடம் கொடுத்தார். "இந்தக் கல்லை எங்கிருந்து எடுத்தாய்?" என்றார் கடவுள். இவர் விபரத்தைக் கூறினார்

"ஏன் அங்கேயிருந்த பெரிய கட்டடங்களிலிருந்து எடுக்கவில்லை? '' என்று கேட்டார் "அவை நல்ல கட்டடமாக இருந்தன அவற்றில் எடுத்தால் அழ்கு கெட்டுவிடும். பழைய வீட்டிலிருந்து எடுத்தால் இனி அங்கே ஒரு புதுவீடு கட்டிவிடுவார்கள் ''என்றார்.

இதன்பின் ஆண்டவன் விளக்கமளித்தார். "நான் அந்தப் பக்தனுக்கு கஷ்டத்தின்மேல் கஷ்டம் கொடுப்பது இதே காரணத்திற்காகத்தான். அவனுக்கு வைராக்கியம் அதிகரிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் செய்கிறேன்'' என்றார். இது தான் அந்தக் கதை

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால் துன்பத்தைக் கண்டு துவண்டு போய்விடக்கூடாது. துன்பம் வரும்போது நமக்கு உறுதிவர வேண்டும் . அந்தமன உறுதியை துணையாக வைத்துக் கொண்டு புது மனிதனாக மாறவேண்டும். "ஐயோ கஷ்டம் வந்து விட்டதே" என்று தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால் அப்படியே உட்கார வேண்டியது தான்.

நமது ஆள் ஒருவர் இருக்கிறார். தான் ஆண்டவனுக்கு மிகநெருக்கம் என்று சொல்லிக் கொண்டிருப்பார். அவரிடம் ஒருவர் வந்து "ஆண்டவன் ஏன் இப்படி என்னைச் சோதிக்கிறார்?'' என்று கவலையுடன் கேட்டார்.உடனே இவர் தன்னையே ஆண்டவனாக நினைத்துக் கொண்டு "ஒரு செங்கல் எடுத்துக் கொண்டு வா சொல்கிறேன்"என்றார். இவர் போய் ஒருவண்டில் செங்கல்லைக் கொண்டுவந்து இவர்முன் கொட்டினார்.

உடனே அவரும் ஆண்டவர் மாதிரியே விளக்கம் கொடுத்தார் "கஷ்டம் வரும்போது மனதில் ஒரு வைராக்கியம் வரவேண்டும் '' என்றார். ''எனக்கு அந்த் வைராக்கியம் இப்போது வந்துவிட்டது உங்களுக்கு வந்து விட்டதா?''என்றார்.''என்ன என்னையே பார்த்து அப்படிக் கேட்கிறாய்?''என்றார். அந்தப் பெரியவர் ''இடிந்துபோன வீட்டை திருப்பிக் கட்ட வேண்டியது நீங்கள் தான். என்னென்றால் இவ்வளவு செங்கல்லும் உங்கள் வீட்டிலிருந்து தான் பெயர்த்துக் கொண்டு வந்தேன் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஹெல உறுமயவின் ஆதரவு வேண்டாம்

## ஜே.வி.பி. ஜனாதிபதிக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

நாடுதழுவிய ரீதியில் முழுமையான தேர்தல் முடிவுகள் வெளியானதும், ஆட்சியமைக்கத் தேவையான 113 ஆசனங்கள் எந்தக் கட்சிக்கும் கிடைக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகாவின் உயர் மட்ட அரசியல் ஆலோசகர்கள் கருத்துக் கூறியுள்ளார்கள்.

இருப்பினும் 6 அல்லது 7 ஆசனங்கள் குறைவான நிலையில், சந்திரிகா குமராதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர் முன்னணியே முதலிடத்தில் வரலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் ஆருடம் கூறியுள்ள நிலையில், சந்திரிகாவும் ஜே.வி.பி. தலைமையும், ஆட்சி அமைப்பதற்கான மேலதிக முயற்சிகளில் இறங்கியிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் முதற் கட்டமாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடனும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன் தினம் நண்பகல் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர் களது ஆதரவை . உறுதிப்படுத்த முயன்றுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

இதற்கிடையில், என்ன நெருக்கடிகள் நேர்ந்தாலும், ஆட்சியமைப்பதற்குத் தேவையான ஆசனங்களுக்காக, ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவை நாடவேண்டாம் என்று அழுத்தம் திருத்தமாக ஜே.வி.பியினர், ஜனாதிபதியிடம் தெரிவித்து விட்டதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகள் கசிந்துள்ளன.

இந் நிலையில், ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வராதவிடத்து, ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன் னணிக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பு உருவாகலாம் என்றும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (தி-18)

# புதிய அரசு எங்களுக்கே

## டி.எம்.ஜயரட்ண பெருமிதம்

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றுவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.ஜயரட்ண புதிய அரசாங்கத்தை தாங்களே அமைக் கப்பபோவதாக பெருமிதம் அடைந்துள்ளார்.

கடந்த 2 ஆம்திகதி நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், ஓர் சில இடங்களில் தேர்தல் வன்முறைகள் இடம் பெற்றாலும் அவை தேர்தல் முடிவுகளை மாற்றக் கூடிய அளவில் நடைபெறவில்லை.

இருப்பினும் திகாமடுல்ல,குருநாகல்,கண்டி போன்ற இடங்களில் மீண்டுமொரு தடவை தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட 4 மாவட்டங்களிலும் மீண்டுமொருமுறை தேர்தல் நடத்தப்படுமாயின் அம் மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றிபெறும்.

இவை தவிர ஏனைய மாவட்டங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் நடைபெற்ற வன்முறைகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு கடித மூலம் விரிவாக அறிவிக்கவுள்ளேன்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆட்சி அமைத்தால் பிரதமர் பதவியாருக்கு கிடைக்கும் என்று ஊடகங்களில் செய்தி வெளியிடப்படுகின்றன. இது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார். (தி-63)

## இராசி பலன்

**05.04.2004**

**(பங்குனி 23, திங்கட்கிழமை)**

**பூரணை பி.ப. 6.19 வரை**

**அத்தம் மு.இ. 7.21 வரை**

**இராகுகாலம் 7.38-9.08**

**சுபநேரம் 12.08- 1.38**

***சித்தம், பூரணை விரதம***

**மேடம்** எடுத்த காரியம் கைகூடும், புதிய திருப்பம், சுவாரஸ்யம், தேகஆரோக்கியம்.

**இடபம்**
நல்ல முயற்சி, குடும்பக்கவலை, உடல் நலக் குறைவு, வேலைப்பளு.

**மிதுனம்**
எடுத்த காரியம், தாமதம், தொழிலில் ஆர்வம், மனச்சோர்வு, வாகனசுகம்.

**கடகம்**
வாக்கு மேன்மை, தனஇலாபம், நினைத்த காரியம் கைகூடும், பிரயாணம் நன்மை.

**சிங்கம**
கற்பனை மிகுதி, முயற்சி தாதம், பொருள்விரயம், வீண் விவாதம்.

**கன்னி**
புதியமுயற்சி, விருந்துபசாரம், பிரயாணம், நண்பர் சந்திப்பு.

**துலாம்**
சயனசுகக் குறைவு, எதிர்பாராத நன்மை, தனவிரயம், நண்பர் விரோதம்.

**விருச்சிகம்**
உறவினர்வழி நன்மை, பொருள்சேர்க்கை, காரியசித்தி, சத்துரு ஜெயம்.

**தனுசு**
புதிய விடயம், நண்பர் உதவி, காரிய நன்மை, தொழிலில் ஆர்வம்.

**மகரம்**
சரீர பிரயாசை, எதிர்பாராத செலவு, புதிய திட்டமிடல், காரிய தாமதம்.

**கும்பம**
தொழில் கஷ்டம், வாகன பயம், வீண் மனஸ்தாபம், உடல் வியாதி.

**மீனம்**
பிரயாணம், புதிய முயற்சி, குடும்ப மகிழ்ச்சி, நண்பர் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## பாடசாலைகளை புனரமைக்க 73 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்தகாலம் இடம் பெற்ற போரினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கென மத்திய கல்வி அமைச்சு 73 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

இந்நிதி மூலம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 86 பாடசாலைகள் விரைவில் மீளப் புனரமைக்கப்படவுள்ளன.

மேலும் ஆட்சி அமைக்க உள்ள புதிய அரசின் புனர்வாழ்வு நிதி உதவி மூலம் இப் பிரதேசகளில் உள்ள மேலும் பல பாடசாலைகள் புனரமைப்புச் செயய்யப்படும் என கல்வி அமைச்சின அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (தி-64,10)

# ஆள் கடத்தும் மையமாக

## இலங்கை விளங்குகிறது

### பாகிஸ்தான் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை ஓர் ஆள் கடத்தல் மைய நாடாக விளங்கிவருவதாகப் பாகிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது. பாகிஸ்தானின் சட்டத்தை நிலை நாட்டும் அமைப்புக்கள்,இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு இது தொடர்பாக ஓர் அறிக்கையொன்றை அனுப்பியுள்ளது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் ஆள் கடத்தலை தடுபபது தொடாபான சட்டதிட் டஙகளை இலங்கை அனுசரித்து நடக்கவில்லை. இதனால் இலங்கையில் சட்டவிரோத ஆள் கடத்தல்கள் நடந்துவருவதாக பாகிஸ்தானின் சட்டத்தை நிலைநாட்டும் அமைப்புக்கள் அந்த அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளன.

(தி-64,10)

## பயிற்சி நெறி

(ஊர்காவற்றுறை)

ஊ/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவில்,வீட்டுமின் இணைப்புப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வீட்டுமின் இணைப்புப் பயிற்சி நெறியைப் பயில விரும்பும் இளைஞர்கள் மேற்படி பாடசாலை அபதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (தி-75)

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு
குறள்

வலம்புரி

# ஆட்சி அமைப்பதில் மீண்டும் குழப்பம்

நடந்து முடிந்த 13வது பாராளுமன்றத் தேர்தலாவது நிலையான ஆட்சியைத் தருமா எனில் அதுவும் இல்லை என்ற முடிவையே பதிலாகத் தருகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நடந்து முடிந்த தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்தாலும், ஆட்சியமைக்கும் பெரும்பான்மைப் பலத்தைப் பெறவில்லை.

225 ஆசனங்களைக் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆகக் குறைந்த பெரும்பான்மைப் பலம் என்பது 113 ஆசனங்களைக் குறிப்பதாகும். இவ்வாசனங்களை இரு பிரதான கட்சிகளும் பெற்றுக்கொள்ளாததன் காரணமாக, ஆட்சியமைப்பதில் பெரும் இழுபறி நிலை தோன்றியுள்ளது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் எந்தக் கட்சியுமே பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக் கொள்ள முடியாதென்பதாக நிலைமை மாறிவிட்டதால், அடிக்கடி பாராளுமன்றம் தளம்பல் அடையப் போவது சர்வ நிச்சயம்.

அதிகப்படியான வாக்குகளை யார் பெற்றிருந்தாலும் ஆட்சியமைப்பதற்கு உதிரிக் கட்சிகளின் ஆதரவு இன்றியமையாததாக இருப்பதால், உதிரிக் கட்சிகளின் பக்கவாத்தியதிற்கேற்ப ஆளும் கட்சி ஆடவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆளும் கட்சி எந்த விதமான முடிவுகளையும் எடுக்கமுடியாமல் போகும்.

குறிப்பாக இனப்பிரச்சினைத் தீர்வை பொறுத்தவரை ஓர் தீர்க்கமான முடிவை எடுப்பதற்கு உதிரிக்கட்சிகளின் ஆதரவோடு இயங்கும் ஆளும் கட்சியால் முடியாமல் போவது கடந்தகால அனுபவங்கள் நமக்குத் தரும் உண்மையாகும். அதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைக்குமாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், ஜே.வி.பி பல்வேறு நிபந்தனைகளை முன்வைக்கும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச்செய்து மீள ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என தேர்தல் பிரசாரங்களில் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கூறியிருந்தார்.

இப்போது ஜே.வி.பி ஆட்சியமைக்கும் அதிகாரத்தை பெற்றிருப்பதால், விடுதலைப் புலிகளுடன் புதியதோர் உடன்படிக்கையை ஏற்படுத்தவேண்டுமென ஜே.வி.பி வலியுறுத்தும். ஜே.வி.பியின் வலியுறுத்தலுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இசைவடைந்து புதியதோர் உடன்படிக்கையைச் செய்ய முற்படுவாராயின், அதற்கு விடுதலைப்புலிகளும் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

ஏற்கனவே செய்யப்பட்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜனாதிபதியும், விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் கையொப்பமிடுவதாயின் அஃது சாத்தியப்படக் கூடியதாகும்.

மாறாக ஒப்பந்தத்தை மாற்றி அமைத்து புதிய நிபந்தனைகளைச் செருகி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதாயின் அது சாத்தியமானதொரு விடயமாக இருக்கமாட்டாது. இந்நிலைமையானது மீண்டுமோர் யுத்தத்திற்கே வழிவகுக்கும்.

இது சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான கட்சி அரசமைத்தால் மட்டுமல்ல ரணில் விக்கிரம சிங்க ஆட்சியமைத்தாலும் வேறோர் வடிவத்தில் சிக்கலை ஏற்படுத்தவே செய்யும்.

தென்னிலங்கை அரசியல் பரப்பில் மூன்றாவது இடத்தில் இருக்கும் ஹெல உறுமயவின் தீர்மானங்கள், பாராளுமன்றத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றது. இதனால் ஆட்சியமைப்பதில் மீண்டும் குழப்பம் ஏற்படவே செய்யும்.

# தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆட்சியமைக்கும் கட்சி பேசவேண்டும்

## அமெ. தூதரகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிவித்தலில் ஆட்சியமைக்கும் கட்சி, உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

வெற்றிபெற்று ஆட்சியமைக்கும் அரசுடன், வாஷிங்டன் அரசு இணைந்து செயற்படத் தயாராக இருக்கிறதென்றும், நாட்டின் பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவது மிகவும் முக்கியம் என்பதில் அமெரிக்கா மிகவும் உறுதியாக இருப்பதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது. விடுதலைப் புலிகளுடன் உடனடிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவது அவசியம் என்பதை அந்த அறிக்கையில் பல தடவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இலங் கையில் நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் மூலம் ஸ்திரமான ஒருஅரசு உருவாகும். அவ்வரசுமூலம் நாட்டில் [illegible] வரைவில் இயல்பு நிலை ஏற்படும். இதன்மூலம் பாதிக்கப்பட்ட [illegible]ளின் இயல்பு வாழ்க்கை தொடரும்.

இதனையே அமெரிக்கா அன்று தொட்டு இன்று வரையும் விரும்புகிறது. ஆட்சி அமைக்கும் புதிய அரசு மூலம் இடை நிறுத்திப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடரும் என அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது என அவ்வறிக்கையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (தி-18)

# ஆட்சி பீடமேறவுள்ள கட்சிகளுக்கு ஜாதிக ஹெல உறுமய பகிரங்க அழைப்பு

(கொழும்பு)

ஆட்சிப் பீடமேறும் வாய்ப்புள்ள இரு பிரதான பௌத்த சிங்களக் கட்சிகளுக்கும், ஜாதிக ஹெல உறுமய விடுத்துள்ள உத்தியோகபூர்வ அழைப்பில், இலங்கையில் ஆட்சியமைப்பதற்கு தங்களது கட்சியின் ஆதரவு தேவைப்படுமிடத்து, எந்தவொரு கட்சியுடனும் தாம் இணைந்துகொள்ளத் தயாராக இருப்பதாகவும், அத்தகைய அழைப்பை எதிர்பார்த்திருப்பதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கையின் 19 மில்லியனுக்கும் அதிகமான மொத்த சனத்தொகையில் 70 வீதமானவர்கள் பௌத்த மதத்தவர்களாக இருப்பதால், பௌத்த மதத்திற்கு வந்துள்ள அச்சுறுத்தலை நீக்க, தங்களது கட்சியை ஆட்சியமைக்கும் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளுமாறு பகிரங்கமான அழைப்பு விடுத்துள்ளது.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஜாதிக ஹெல உறுமயவை இணைத்துக் கொள்ளவேண்டாம் என மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியிடம் கேட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜாதிக ஹெல உறுமயக்கட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைத்துக் கொள்ளவேண்டாம் என்பதற்கு அக்கட்சி கூறும் காரணம் இன்னமும் வெளியிடப்படவில்லை.

இதனால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி கூட்டுச் சேர்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன.

ஜனாதிபதி ஜாதிக ஹெல உறுமயக் கட... டன் கூட்டுச் சேராவிட்டால் அக்கட்சி ஐக்கியதே. !க் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெவித்துள்ளனர். (தி-63)

# தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் தேர்தல்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற உதவிய, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண் காணிப்புக்குழுத் தலைவர் தமது நன்றியைத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை வரலாற்றில் இதுவரை நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்பிடும் போது இம்முறை நடந்த தேர்தல் அமைதியாகவும் அதிக வன்முறைச் சம்பவங்கள் இல்லாமலும் நடைபெற்றுள்ளன. தேர்தலை அமைதியாக நடத்த அனைவரும் சிறப்பாக தமது பங்களிப்பை வழங்கியிருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழுவின் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எதுவித தேர்தல் வன்முறைகளும் அற்ற ஒரு சுமுகமான சூழ்நிலையில் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன.

இத்தகைய தொரு தேர்தலையே நாங்களும் எதிர்பார்த்திருந்தோம், நாங்கள் எதிர்பார்த்தவாறு நடைபெற்று முடிவடைந்துள்ள இத்தேர்தலுக்கு தமிழீழ விடு தலைப் புலிகள் தமது பூரண ஆதரவை வழங்கினார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-63)

# அமைச்சரது வாகனம் மீது தாக்குதல்

## 27ம் திகதி வரை விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சரின் அலுவலக வாகனம் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திஸாநாயக்கா, மகிந்த விஜயசேகர ஆகியோரின் புதல்வர்கள் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி விடுதியொன்றிற்குச் சென்ற இரு அமைச்சர்களினதும் புதல்வர்கள் அங்கிருந்த மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர்கபீர் ஹாசிமின் உறவினர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு பின்னர் அவர்களை கடுமையாதத் தாக்கியதுடன் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சுக்கு சொந்தமான வாகனம் ஒன்றையும் தாக்கி சேதப்படுத்தியிருந்தார்கள்.

இதனையடுத்து இவர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பு நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்திருந்தார்கள்.

கொழும்பு பிரதம நீதிவானும் மேலதிக மவாட்ட நீதிவானுமான சரத் சி.கருணாரட்ண, இது தொடர்பான விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்கள் நீதிமன்ற அறிவித்தல் கிடைக்கும் போது நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராக வேண்டும் என அறிவுறுத்தி பிணையில் செல்ல அனுமதித்திருந்தமை தெரிந்ததே. (தி-10)

# குடிநீர் வழங்கல்

(ஊர்கவற்றுறை)

ஊர்கவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்ற இடங்களுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது.

இப் பிரதேச செயலர் பிரிவில் உள்ளதம்பாட்டி, மெலிஞ்சிமுனை, பருத்தியடைப்பு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

எழுவைத்தீவுக்கு படகு பவுஸர் மூலமும், பருத்தியடைப்பு மெலிஞ்சிமுனை, தம்பாட்டி கிரமங்களுக்கு பவுஸர் மூலமும் குடிநீர் வழங்கப்படவுள்ளன.

(தி-75)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

எல்லையற்ற ஆன்மாவைத் தவிர எல்லாம் மாறிக் கொண்டிருக்கின்றன. மாற்றம் என்னும் சூழல்தான் எங்கும் நிரந்திரம் என்பது உங்களைத் தவிர வேறு எங்கும் இல்லை. அங்குதான் மாறாத பேரின்பம் உள்ளது. அதை நமக்குத் திறந்து காட்டுகின்ற வாசல்தான் தியானம்

சுவாமி விவேகானந்தர்

# தவக்காலச் சிந்தனை~40

நறுமணத்தைலத்தால் இயேசுவின் பாதங்களை பூசியபோது மரியாள் தன் அன்பை அவருக்கு பரிசாகக் காட்டினார். இந்தச் செய்கை வீணானது என்று குமுறுமாறு செய்தது யூதாசை. இயேசுவின் காலடிகள் மரியாவுக்கு வாழ்வு வளர்க்கும் வழித் தடங்கள். எனவே அவற்றை வணங்குவது இயேசுவை மகிமைப்படுத்தும் வழிமுறை என்று கண்டார். பணத்தையும் பெற்றுப் புகழ்ச்சியையும் கட்டிப் பிடித்துக் கொண்டதால் இயேசுவின் மேல் கொண்டிருக்க வேண்டிய பற்றுறுதியை பறி கொடுத்தான் யூதாஸ். நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் இயேசுவிடம் அன்பு கொண்டு அவரையே பற்றிக் கொண்டால்தான் நமது அன்றாட வாழ்வின் அல்லல்களை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ள முடியும் என்பது மரியா காட்டும் மாதிரிகை. ஏழைகளுக்கு சேவை என்று கொக்கரித்து அவர்களை நம் கடவுள் என்ற நிலைப்பாட்டை நியாயப்படுத்தும் போது நாம் கடவுளாலும் மக்களாலும் கண்டிக்கப்படுவோம் என்பதற்கு யூதாஸ் ஓர் எடுத்துக்காட்டு எல்லா மகிமையும் இறைவனுக்கும் அதுவும் அயலாரின் நன்மைக்கே என்ற குறிக்கோளின் நாம் வளரும் நம்மிலும், பிறரிலும் இறைவனே மையமாவார் என எண்பிக்க மரியா நம்மை அழைக்கிறார்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

# அரசியல் கட்சிகள் பெற்றஆசனங்கள் தேர்தல் ஆணையாளரால் அறிவிப்பு

(நமது நிருபர்)

13வது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளும் அவை பெற்ற ஆசனங்களும் வருமாறு,

| | மொத்தவாக்கு | ஆசனம் |
|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4223970 | 105 |
| ஐக்கிய தேசியக்கட்சி | 3504200 | 82 |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 633654 | 22 |
| ஜாதிக் ஹெல உறுமய | 552724 | 09 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 186876 | 05 |
| மலையக மக்கள் முன்னணி | 49728 | 01 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | 24955 | 01 |
| | | 225 |

## தேர்தலில்...

யாகத் தமது வாக்குகளைச் செலுத்தி, அதற்கு மகத்தான வரலாற்று வெற்றியைப் பெற்றுக்கொடுத்து, சர்வதேச சமூகத்திற்கும், சிங்கள தேசத்திற்கும் பகிரங்கமாகப் பெரும் செய்தியினைச் சொல்லியுள்ளார்கள்.

மீண்டும் இத்தேர்தல் மூலம் தமிழ்மக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைத் தமிழீழ மக்களின் தேசியத் தலைமையாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களின் உண்மையான ஏகப்பிரதிநிதிகளாகவும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறியிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் எந்தவிதமான பேதங்களுமின்றி ஒன்றுபட்டு, ஒற்றுமையாக நிற்பதை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அத்தோடு, தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை ஆகிய தமிழீழத் தேசிய இனத்தின் மூலாதாரக் கோரிக்கைகளை ஏற்று அவற்றின் அடிப்படையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதையும், இல்லாதுவிடின் தமிழீழத் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையை நிலைநிறுத்தப் போராடுவோம் என்பதையும் தெளிவாக இடித்துரைத்துள்ளார்கள்.

தமிழீழத் தனியரசை அமைக்குமாறு 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் வாக்களித்த பின்னர் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில்தான் மிகப் பெரிய அளவில் எழுச்சிபெற்று தமிழ்த்தேசிய உணர்வோடு தமது அபிலாஷைகளையும் விருப்பங்களையும் மிகவும் உறுதியாக, தீர்க்கமான முறையில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இதன்மூலம் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை எவரும் கொச்சைப்படுத்தவோ, அசட்டைசெய்யவோ முடியாதவாறு அதனை தூக்கி நிறுத்தயிருக்கின்றார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளை ஓர் பலம்மிக்க ஓர் வலுவான மக்கள் சக்தியாக உலகிற்கு மீளவும் நிருபித்திருக்கின்றார்கள் எமது போராட்ட முன்னெடுப்புக்களுக்குக் கிடைத்த மாபெரும் அரசியல் வெற்றி இந்த மாபெரும் வெற்றியை ஈட்டித்தந்த தமிழ் மக்களுக்கு இச்சந்தர்ப்பத்திலே தமிழீழத் தேசியத் தலைவர் சார்பாகவும் எமது விடுதலை அமைப்பின் சார்பாகவும் நன்றியையும் பாராட்டுதல்கயையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு, தமிழ் மக்களது பாதுகாப்பிற்கும் சுதந்திரவாழ்விற்காகவும் அயராது போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைமைத்துவத்தினது அரசியல் போராட்ட முன்னெடுப்புக்களுக்கும் பக்கதுணையாக இருந்து செயற்படவுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு தொடர்ந்து உங்கள் நல்லாதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிச் செயற்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## மக்கள்...

இளம்பரிதி நன்றி தெரிவித்தார். கூட்டமைப்பு வேட்பாளர்கள், தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை விரைவில் சந்தித்து பேசவும் தீர்மானிக்கப்பட்டது. (த)

## ஐ.நா.சபையை...

தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம், தன்னாட்சி உரிமை என்பவற்றை அங்கீகரிக்கக் கோரி இம் மாபெரும் எழுச்சிப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் பொங்குதமிழ் எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்வதற்காக சுவிற்சர்லாந்துக்கு செல்கின்றனர். இப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழ்மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக சுவிற்சர்லாந்துக்குச் சென்றுள்ளனர். இவர்கள் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணாவின் உண்மை நிலைப்பாடு குறித்தும் மட்டக்களப்பில் நிலவும் சூழ்நிலைகள் குறித்தும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு அவர்கள் தெளிவுபடுத்தவுள்ளனர். (த)

## ஆட்சியமைப்பதில்...

13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் யாவும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெறாத போதும், 105 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மைக் கட்சிகளாக இருபதால், அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

புதிய அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ள ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு இன்னும் 8 எம்.பிக்களின் ஆதரவு தேவையாகவுள்ள நிலையில், ஐந்து ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறும் முயற்சியில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு முஸ்லிம் காங்கிரஸின் வெற்றி குறித்த வாழ்த்தைத் தெரிவித்ததுடன், ஐக்கிய மக்கள் சுதந்திர

## ஆட்சியமைப்பு...

உத்தரவாதங்களைத் தரக் கூடிய கடசிக்கே தமிழ்க்கூட்டமைப்பு ஆதரவு வழங்கும். தேர்தல் முடிவுகள் சம்பந்தமாக ஒரு சில தினங்களில் விடுதலைப் புலிகளை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசவுள்ளோம்.

இதன் பின்னர் தான் தென்னிலங்கையில் யார் ஆட்சியமைக்க விரும்புகிறார்களோ அவர்களுக்கு எமது ஆதரவை வழங்குவது குறித்து முடிவெடுப்போம். இவ்வாறு மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ச)

## ஆட்சியமைக்கும்...

கள் சுதந்திர முன்னணி புதிய அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ள நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி மதிப்பளிக்கிறது. மக்கள் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு அதற்கு மதிப்பளிக்கும் வகையில் புதிய அரசை அமைக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடாது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியமைப்பதை குழப்பும் நடவடிக்கையிலும் ஐக்கியதேசியக் கட்சி ஈடுபடாது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம)

முன்னணி ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குமாறு கோரியிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஐக்கியதேசிய முன்னணியுடன் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிஸும் ஒரு ஆசனத்தைப் பெற்றுள்ள மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பெ.சந்திரசேகரன் ஆதரவையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கோரியுள்ளதாக கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்நிலையில், ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியே ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெறக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க நிரந்தர சமாதானத்திற்கான ஆணையை விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான ஆணையையும் பெரும்பான்மை சிங்கள மக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு வழங்கியிருப்பதால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி கோரலாம் என்றும் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## தற்காலிக இடமாற்றம்

### ஏசியன்ற் பெயின்ற் (லங்கா) லிமிட்டெட் ஸ்தாபனம்

100A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (யாழ். விநியோக நிலையம்) இயங்கிவந்த மேற்படி நிறுவனம் தற்பொழுது தற்காலிகமாக 10/11, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம், முட்டாஸ்கடை சந்திக்கு அருகாமையில் (விவேகானந்தா அச்சகத்துக்கு முன்பாக) தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நன்றி

JAFFNA HARDWARES
ASIAN PAINTS
100A, STANLEY ROAD,
JAFFNA. T.P.021-2227028 (சி-7486)

உரிமையாளர்கள்,
யாழ்ப்பாண இரும்பகம்
10/11 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## அழைப்புக் கட்டளை

(இல. 16-பிரிவு 55(1))

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/நீதிமன்றத்தின்

இளையதம்பி சற்குருநாதன்
கொட்டடி, யாழ்ப்பாணம்

வழக்கு இல: மணநீக்கம்/344 எதிர் வழக்காளி

இ. சற்குருநாதன் பெண் சிவபாக்கியம்
வேலணை மேற்கு, வேலணை.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இரத்துச் செய்யக் கோரி

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளராதலினால் அதற்கு உமது மறுமொழி, ஏதேனும் இருப்பின் 2004 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறு மொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில். வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைந்தது

லிங்கா துரைராஜா
வழக்காளியின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி
து. சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம்: பதிவாளர்

2004 ஆண்டு பங்குனி மாதம்
30 அந் நாளாகிய இன்று (8479)

## என் இனிய உறவுகளுக்கு



## என் இதயம் கனிந்த நன்றிகள்

எமது தேசத்தின் தேவையுணர்ந்து தேசியத்திற்கு மதிப்புக்கொடுத்து என்னையும், நான் சார்ந்த அமைப்பைச்சேர்ந்தவர்களையும் இத்தேர்தலில் வெற்றிகொள்ளவைத்த அன்பான வாக்காளர்களுக்கும் விருப்புவாக்குமூலம் என்னைவெற்றிபெறவைத்த கோப்பாய், நல்லூர், மானிப்பாய், வட்டுக்கோட்டை தொகுதிவாழ் மக்களுக்கும் என் இதயம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறப்பாக 70 % வாக்களிப்புச்செய்த தென்மராட்சித் தொகுதி மக்களுக்கு மனமுவர்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க தமிழினம் வளர்க தேசியம்

(8481) நடராஜா இரவிராஜ்